Registerad as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 21 (06-II-1992) வெள்ளிக்கிழமை ஓசை 262

## கல்விச்சேவைகள் சபை தகவற் பிரிவு அமைப்பு

கல்விச் சேவைகள் சபை இஸ்ருபாயாவில் தகவல் பிரிவொன்றை அமைத்துள்ளது ஆசிரியர் தரத்தில் சேர்வதற்குப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அதிபர் தரம் ஒன்று 2,3 மற்றும் கல்வி நிர்வாக சேவை தரம் 3 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தங்கள் பெறுபேறுகள் தொடர்பான முழுவிபரங்களையும் தகவல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். 15,000 ஆசிரியர் நியமனங்கள் 5,000 பதவி உயர்வுகள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நியமனங்களும், பதவி உயர்வுகளும் பரீட்சைத் திணைக்களம் நடத்திய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டன. (6 ஆம் பக்கம் பார்க்க)

# பத்தமேனி பகுதியில் உக்கிரமான சண்டை

# முன்னேற முயன்ற ராணுவம் விரட்டியடிப்பு

## படையினர் தரப்பில் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து அச்சுவேலி - தொண்டமானாறு பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை உக்கிர சண்டை மூண்டது. பல மணித்தியாலங்கள் நீடித்த இந்த உக்கிர மோதலை அடுத்து, சிறிலங்கா இராணுவம் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றது. இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

நேற்றுக்காலை 6.00 மணியளவில் பலாலி முகாமின் கிழக்குப்பகுதியாகவுள்ள வளலாய், பத்தமேனி, ஒட்டகப்புலம் ஆகிய கிராமங்களிலிருந்து எறிகணைவீச்சு நடத்தியவாறு தொண்டமானாறு - அச்சுவேலிப் பகுதிகளை நோக்கி இராணுவம் முன்னேற முயன்றது. இராணுவம் முகாமிலிருந்து சிறிது தூரம் வெளிவந்ததும் விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மூண்ட உக்கிர சண்டை பகல் 11 30 மணிவரையிலும் நீடித்தது. இச்சண்டையின் போது விடுதலைப்புலிகள் 60 எம்.எம் மோட்டார் பயன்படுத்தி பலத்த எதிர் தாக்குதலை நடத்தினர்.

புலிகளின் உக்கிர தாக்குதலினால் இராணுவத்திற்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவம் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கிச் சென்றது

இதேவேளை இத்தாக்குதல் இடம் பெற்ற போது உலங்கு வானூர்தி ஒன்று தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

### வீரச்சாவு



## பலாலி ராணுவம் ஷெல் தாக்குதல்; அச்சுவேலியில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை வலிகாமம் தெற்குப் பகுதிகளை நோக்கி மூர்க்கத்தனமான ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் சிலர் காயமடைந்ததுடன் பல வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 2 30 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட பல எறிகணைகள் வளலாய், பத்தமேனி, அச்சுவேலி, தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத் தாக்குதல்கள் மாலை வரை தொடர்ந்தன என தெரியவருகின்றது.

மேற்படி தாக்குதலினால் பொன்னுத்துரை (வயது 48 அச்சுவேலிவடக்கு) என்பவரே கொல்லப்பட்டவராவார். (பா)

## மன்னார் மாவட்டத்தில்

## மீட்பு நிதி சேகரிப்பு

நாளை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவினருக்கான மீட்பு நிதி சேகரிப்பு காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரை சென் பற்றிக் கல்லூரியிலும் நல்லூர், தீவகம், காரைநகர், உதவி அரசாங்க அதிபர் பிரிவினருக்கான மீட்பு நிதி சேகரிப்பு காலை 10-30 தொடக்கம் 12-00 மணி வரை கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான மீட்புநிதி சேகரிப்பு பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 3-15 தொடக்கம் 4-00 மணிவரை அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும், 4-15 தொடக்கம் 5-00 மணி வரை உரும்பராய் இந்துக் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன.

## மேஜர் முரளி ஞாபகார்த்த பரிசளிப்பு வைபவம்

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக யாழ். மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட புதிர்ப்போட்டி, விளையாட்டு விழா பரிசளிப்பு வைபவம் நாளை பி ப. 1. 00 மணிக்கு யாழ்ப்பாண கைலாசபதி அரங்கில் யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சோ. தங்கன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிரதேசக் கல்விப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலை. மாணவர் அடையாள பகிஷ்கரிப்பு

(மண்டூர்)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலை வர்த்தக பீட மாணவர்கள் நேற்று முன்தினம் 48 மணி நேர அடையாள பகிஷ்கரிப்பில் இறங்கியுள்ளனர்.

தமக்கு பாடங்களைப் போதிப்பதற்கு போதிய விரிவுரையாளர், பேராசிரியர்கள் இல்லையெனவும் விடுதி, மைதானம், நூலக வசதி திருப்திகரமாக இருக்கவேண்டுமெனக் கூறி இருநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்கள் தமது கோரிக்கைகளை உயர் பீடத்திடம் சமர்ப்பித்துள்ளதுடன் இரு நாட்களுக்கு சாதகமான பதில் தராவிட்டால் இவ் விவகாரத்தை நாடளாவிய ரீதியில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய-சிரேஷ்ட மாணவர் ஒன்றுகூடல் ஒழுக்கவிதி உருவாக்க வேண்டும்

### மருத்துவபீட மாணவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


செய்திக் குறிப்பொன்று தெரி

தின் உள்ளும் வெளியிலும்

மேற்கொண்டனர். இத்தாக்

ஏவப்பட்ட பல எறிகணைகள்

பொன்னுத்துரை (வயது 48 அச்சுவேலிவடக்கு) என்பவரே கொல்லப்பட்டவரார். (பா)



2ஆம் லெப். குகன்



வீரவேங்கை உமைமாறன்

வளலாய், பத்தமேனி, ஒட்டகப்புலம் பகுதியில் நேற்று இராணுவத்தினருடனான நேரடி மோதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த 2ஆம் லெப். குகன் (நீல்டன்-சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார் துன்னாலை வடக்கு), வீரவேங்கை உமைமாறன் (முருகேசபிள்ளை ஜீவகுமார், 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மன்னார்மாவட்டத்தில்

# 30மைல் இராணுவ வேலி; அரசின் திட்டம் முறியடிப்பு

-ஜான்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் 30 மைல் நீளமான பாரிய இராணுவ வேலியை அமைக்கும் சிறிலங்கா இராணுவத்தின் திட்டம் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி திரு ஜான் புலிகளின்குரலுக்கு தெரிவித்துள்ளார்.

பூநகரி, பள்ளிக்குடா பகுதியில் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட பாரிய அதிரடித் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகளையும் தோல்விகளையும் ஈடுசெய்யும் ஒரு முயற்சியாகவே அதிவேக அதிரடி தாக்குதல் என்ற நடவடிக்கையை மேற்கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளினால் இம் முயற்சி தோல்வி அடைந்துள்ளது இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒயில் தகரங்கள் கரை ஒதுங்குகின்றன

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பிராந்தியத்தில் ஏற்பட்ட கடல் அலை வேகத்தில் தினமும் ஒயில் தகரங்கள் மிதந்துவந்து கரையை அடைகின்றன இவை பருத்தித்துறை. வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதி கடற்பகுதியில் கரை ஒதுங்குகின்றன

ஒரு ஒயில் தகரம் சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்ததென மதிடபீடு செய்யப்படுகிறது

## 63 இளைஞர் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் 63 இளைஞர்கள் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் கடத்தப்பட்டுளளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூரண இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் இப்பகுதியில் மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்தார்,

பருத்தித்துறை துறைமுகத்தில்

## கடல் கொந்தளிப்பால் பொருள்கள் இறக்குவதில் சிரமம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றன.

கடற் கொந்தளிப்பும் கடலில் வீசும் வேகமான காற்றின் மத்தியிலும் பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன.

இருந்த போதிலும் கடலில் திசை திரும்பிச் செல்லும் படகுகள் பாஜ்களை ஊழியர்கள் பலத்த கஷ்டத்தின் மத்தியி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 40 தமிழ் இளைஞர் அம்பாறை முகாமில் தடுப்பு

மட்டக்களப்பு மாவட்டதில் வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள காக்காச்சி வெட்டைக் கிராமத்தில் அக்டோபர் 19ஆம் திகதி இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட 40 இளைஞர்கள் அம்பாறையிலுள்ள இராணுவ ஒருங்கிணைப்பு தலைமை வலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் டி. பி. விஜயதுங்கா கடந்த புதன்கிழமை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

## வயிற்றோட்ட நோயினால் ஒரு குழந்தை பலி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் வயிற்றோட்டத்தினால் நூற்றுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

தினமும் இவ் வைத்தியசாலையில் பலர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை வயிற்றோட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மருத்துவப் பீடாதிபதியின் அமைதியைக் குலைக்கும் வகையில் துரதிர்ஷ்டமானசம்பவங்கள் நேரிட்டிருக்க கூடாது என்பது எமது மனப்பூர்வமான விருப்பமாகும். ஆனால் நடைபெற்ற சம்பவங்களினால் உண்டான அபிப்பிராய பேதத்தைச் சுமுகமான முறையில் தீர்க்காமல் பீடாதிபதி தனது பதவியை ராஜினாமாச்செய்ததன் மூலம் உருவாகியுள்ள பாரதூரமான நிலையைத் தவிர்த்திருக்கலாம் என்று கருதுகிறோம்.

இவ்வாறு மருத்துவபீட இறுதி வருட மாணவர் சார்பில் இருவர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது

புதிய - சிரேஷ்ட மாணவர்கள் ஒன்று கூடல் சம்பந்தமாக ஒழுக்க விதிகளோ அல்லது அதனை முறைப்படுத்திக் கூறும் கட்டுப்பாடுகளோ நடைமுறையில் இல்லை. அப்படி எதுவும் இல்லாத காரணத்தினால்தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. புதிய-சிரேஷ்ட மாணவர்கள் நன்மை கருதிப் பல்கலைக்கழக மானியங்கள் குழுவும், பல்கலைக்கழக நிர்வாகமும் கலந்து ஒழுக்க விதிகளை உருவாக்க வேண்டும், அதனைச் செய்வதன் மூலம் மாணவரிடையில் காணப்படும் கெடுபிடி குறைவதோடு, பல்கலைக் கழகத்தின் உள்ளும் வெளியிலும் நட்புறவும், சுமுக நிலையும் நீடிக்க உதவும் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது

அந்த அறிக்கையில் பேராசியர் பீடாதிபதியாக இருப்பதன் மூலம் மருத்துவ பீடம் சர்வதேச அந்தஸ்தைப் பெறும் என்பது தமது நம்பிக்கையாகும் என்றும்,

நடந்த சம்பவங்கள்குறித்து தாம் அதிர்ச்சியும், கவலையும் தெரிவிப்பதோடு. அவர் பதவியில் தொடர்ந்தும் இருந்து எப்போதும்போல தன் சேவையைத் தொடர வேண்டும் என்பது தமது தாழ்மையான வேண்டுகோளாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை 'முடிப்பதற்கு காலக்கெடு விதிக்க முடியாது

டி.பி. விஜயதுங்க

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதி யுத்தத்தைக் கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதே அரசின் நோக்கமாகும் என்று பிரதம மந்திரி டி பி. விஜயதுங்கா பாராளு மன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். எனினும் இதற்கொரு காலக்கெடுவை நிர்ணயிப்பது கடினமாகும்.

இந்த நோக்கத்தை அடைவதற்கு ஏதுவாகப் பாதுகாப்புப் படையினருக்கு சில வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன பாதுகாப்புப் படையினர் மீது அரசுக்குப் பூரண நம்பிக்கையுண்டு அவர்கள் தமது பணியை முடிப்பற்கு திட சங்கற்பம் பூண்டுள்ளார்கள் என்று பிரதம மந்திரி தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதி யுத்தத்தில் அரசு வெற்றி பெறுவதற்குச் சகல நடவடிக்கைகளும்எடுக்கப்படும்என்றும் கூறினார்.

## யுத்தத்தில் வெற்றிபெற இந்தியாவின் உதவி தேவை

(கொழும்பு)

இந்த யுத்தத்தில் வெற்றி பெற எமக்கு இந்தியாவின் உதவி அவசியமாகும் புலிகளை தோற்கடிக்க ஏன் இந்தியாவின் உதவியை நாடக்கூடாது? என கேள்வி எழுப்பினார் பாராளுமன்ற உறுப்பினர் டி. எம். ஜெயரட்ண.

படையினர் இன்று நம்பிக்கையுடன் செயற்படவில்லை. அதற்குக் காரணம் அரசாங்கம் அவர்கள் மீது அக்கறை செலுத்தாமையாகும். இதனால் யுத்தத்தில்தோல்விமேல் தோல்வி ஏற்படுகிறது என மேலும் அவர் தெரிவித்தார்

**காடு தரும் மழையில் நாடு பெறும் செல்வம்**

# நிலத்தடி நீர் மாசடைதலைத் தடுப்பதில் வடிகால் அமைப்பு பேருதவி புரிகிறது

மனிதன் நாடோடி வாழ்க்கையில் இருந்து சமுதாய வாழ்வுக்குள் புகுந்த காலகட்டத்தில், நிலையாக வாழக் கூடிய ஓர் இடத்தை தெரிவு செய்வது மிக்க கடினமாய் இருந்துள்ளது. இயற்கைச் செயற்பாடுகள் அவனது நிலையான வாழ்வுக்கு உகந்ததாயமைந்த இடங்களில் மட்டுமே மனித நாகரிக வளர்ச்சி ஏற்பட்டது. மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, நீர் ஆகிய இரண்டும் தூய நிலையில் கிடைப்பது முக்கியமாய் இருந்தது. உயிரின வாழ்வு நிலத்தினதும், நீரினதும் தன்மையில் தங்கியிருப்பதால் இவ் இரண்டையும் பேணிக்காப்பது அவனது முதற் கடமையாயிற்று. நிலமும் நீரும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. இவை இரண்டினதும் இணைந்த செயற்பாடு பற்றிய நுணுக்க அறிவு வளர்ச்சி அடைந்த போதே செயற்கை வடிகாலமைப்பு உருவாக்கம் பெற்றது.

இயற்கை வடிகாலமைப்பு இல்லாத சமவெளிப் பிரதேசங்களில் தோன்றிய நாகரிகங்கள் நீடித்து நிலைத்திருப்பதற்கு அம்மக்கள் உருவாக்கிய செயற்கை வடிகாலமைப்பு முதன்மையாய் இருந்துள்ளது. இதற்கு சிந்துவெளி நாகரிகம் ஓர் சான்று. வடிகாலமைப்பின் அடிப்படைத் தொழிற்பாடு, மனித செயற்பாட்டினால் நிலம், நீர் ஆகியவற்றின் இரசாயன, பௌதிக சமநிலை கெடாமல் காப்பதாகும். நிலையாக வளர்ந்த மனித சமூகத்தால் சுற்றுப்புறச் சூழலில் பாரிய தாக்கம் ஏற்பட்டது. இயற்கையான சூழல் சீராக்கல் வேகத்தை மிஞ்சிய நடவடிக்கைகள் சமச்சீரற்ற நிலையை தோற்றுவித்த போதே அதனைச் சீர் செய்யும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக செயற்கை வடிகாலமைப்பு உருப்பெற்றது.

பெருகிவரும் மக்கள் தொகையின் அந்தச் செயற்பாட்டினால், குறிப்பாக உணவு உற்பத்தி நடவடிக்கைகளால் மண்ணின் பௌதிக இரசாயன தன்மைகள் மாற்றமடைந்து தேவையற்ற சில கூறுகள் அதிகரிப்பதும், தேவையான கூறுகள் அருகிப் போவதும் பாதகமான நிலையைத்தோற்றுவிக்கின்றது. இந் நிலையில் மழை வெள்ளம் ஏற்படும் போது தேவையற்ற மேலதிக இரசாயனக் கூறுகள் அள்ளிச் செல்லப்படுவதுடன் பௌதிக தன்மையும் மாறுகின்றது. மழை வெள்ள ஓட்டம் இயற்கையான சீர்செய்யும் தொழிற்பாடாய் அமைகின்றது. இதனை துல்லியமாய் அறிந்துகொண்ட மனிதன் இயற்கை நடவடிக்கைக்கு வலுவூட்டுவதற்கு செயற்கை வடிகால்களை அமைத்தான்.

யாழ்ப்பாணம் குடா நாடு ஓர் தட்டையான சமவெளிப் பிரதேசமாகும். இங்கு இயற்கை வடிகால்கள் இல்லாதுள்ளது கரையோரம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நீர் வழிந்தோடும் சாத்தியம் இல்லாதுள்ளது இங்கு அமைக்கப்பட்ட செயற்கை வடிகால் அமைப்புப் பிரதேசத்தின் விசாயத் தேவைகளை முன்நிறுத்தியே உருவாக்கப்பட்டது. மனித செயற்பாட்டுக்குத் தேவையான நீர் நிலத்தடித் தேக்கத்தில் இருந்தே வருடம் முழுவதும் பெறப்படுகின்றது. எனவே இங்கு மண்ணின் இரசாயன பௌதிக சமச்சீரைபேணுவதுடன் நிலத்தடி நீரின் இரசாயனத் தன்மையைச் சீராகப் பேணலும் முக்கியமாகின்றது, மழை நீரானது நிலத்தடி நீர்த்தேக்கத்தை அடையும்போது மண்ணில் உள்ள இரசாயனப் பொருள்களையும் கொண்டு சேர்க்கின்றது இதனால்நிலத்தடிநீர் மாசடைகின்றது. எனவே மழைநீர் நிலத்துள் புகுமுன் மண்ணின் மேற்பகுதியில் வெள்ளம் வாரடித்து ஓடுதல், வேண்டாத இரசாயனப் பொருள்களைக் கழுவிச் செல்ல உதவுகின்றது. இதற்கு வெள்ளவாய்க்கால் அமைப்பு உதவுகின்றது.

குறிப்பிட்ட ஓர் பயிர்ச் செய்கைக்கு உதவாத இரசாயன உப்புக்கள் வேறு ஓர் பயிருக்கு மிக அவசியமாய் அமைவதால், மண்ணில் சேரும் உப்புக்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்படுவதை வெள்ளவாய்க்கால் தொடரில் ஆங்காங்கே அமைந்துள்ள குளங்கள் தடுக்கின்றன வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்படும் இவ் உப்புக்கள் குளத்தில் தேங்கி குள வண்டலுடன் அடைகின்றது. இவ்வண்டல் காலத்துக்குக்காலம் அகற்றப்படல் வேண்டும். தேவையான மாற்றுப் பயிர்களுக்கு பாவிப்பதன் மூலம் உச்சப்பயனைப் பெறலாம்.

யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாண நகரமே அதியுயர் சனஅடர்த்தியுள்ளது. யாழ். நகர் கடலேரியை அண்டி இருப்பினும் இதன் சமதரைத் தன்மையால், சிறந்த வடிகாலமைப்பு மிக அவசியமாகின்றது நகரில் பெய்யும் மழையால் ஏற்படும் வெள்ளத்துடன் நகரின் எல்லைக்கு அப்பால் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் இருந்து வரும் வெள்ளமும் இணைந்து கடலேரியை அடைகின்றது. நகர்ப்பகுதியில் நிலத்தடி நீரும் ஆழம் குறைந்து காணப்படுவதால் நீர் மாசடையும் சாத்தியம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நகர்ப்பகுதிகளில் சன நெருக்கடி மிகுந்திருப்பதாலும், சுகாதாரக் கண்காணிப்பு கூடுதலாக இருப்பதாலும் பெரும்பாலான வீடுகளில் மலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை குழி மலகூடங்களே மழைகாலங்களில் நிலத்தடி நீர் மட்டமானது உயர்ந்து நில மட்டத்தை அடைந்து விடுகின்றது.

இதனால் மேல்மண்ணில் இருக்கும்உப்புக்களும், ஏனைய மாசுப்பொருள்களும், அமிலத் தன்மையும் நிலத்தடி நீருடன் கலக்கின்றது. அத்துடன் மலகூடக்கழிவுப் பொருட்களும் இணைகின்றது. இதனால் மிகப்பாரிய அளவில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது யாழ். நகருக்கான தற்போதைய வெள்ளவடிகாலமைப்பு ஏறத்தாழ இரண்டரை நூற்றாண்டின் முன் அமைக்கப் பெற்றது. இவ்வடிகாலமைப்பு சிறந்த நிலையில் பேணப்படும் போது நிலத்தடி நீர் மட்டம் மழைக்காலத்தில் ஓர் குறிப்பிட்ட மட்டத்திற்கு மேல் உயராமல் பாதுகாக்க முடியும். அத்துடன் மேற்பரப்பில் இரண்டு மூன்று அடி ஆழ மண்ணில் இருந்து கழுவிச் செல்லப்படும் மாசுப் பொருட்களை வடிகாலினுள் செலுத்தி கடலுக்கு எடுத்துச் செல்ல முடிகின்றது

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள சகல குளங்களும் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு பிரதான வடிகாலமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. சமதரையில் அமைந்த வடிகால்களாதலால் பெரும்பாலான வண்டல், நீரில் தொங்கு நிலையிலேயே அடித்துச் செல்லப்படுகின்றது இவ்வண்டல் நேரே கடலேரியைச் சென்றடையுமாயின் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் கடல்வழிப்பாதைகளிலும் தடங்கலை ஏற்படுத்தும், வடிகாலில் நீர்த்தேக்கம் ஏற்படுமாயின் இவ்வண்டல் வடிகாலில் அடைந்து தங்கிவிடுவதால் வடிகால் மூடப்படுகின்றது இவற்றைத் தவிர்ப்பதன் பொருட்டே வடிகால்கள் குளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. வடிகாலில் வரும் வண்டலும், ஏனைய இரசாயனப் பொருட்களும் தேங்கி அடியில் அடைகின்றது. குறிப்பிட்ட காலஎல்லையில் இக் குளங்களிலிருந்து தூர் அகற்றுவதன் மூலம் யாழ்.நகரவடிகாலமைப்பைப் பராமரிப்பது சுலபமாகின்றது.

## இவ் வார அறிமுகம்

### மாற்றம்

''சமூகம்என்பது கொடிய பிசாசைப் போன்றது. அது ஒவ்வொரு மனிதர்களையும் விமர்சிக்கத் தவறுவதில்லை. விமர்சனம் என்பது வேண்டப்படுவதே ஆனால் அநீதியான விமர்சனங்கள் மக்களின் அழிவுக்கு வழி சமைத்து விடுகிறது''என்றமுத்தாய்ப்பான ஆசிரியர் தலையங்கத்தோடு ''மாற்றம்'' இதழ் வெளிவந்துள்ளது.

பெரும்பாலும் துணுக்குகள், மாமனிதர்கலைஞானியுடன் ஒருசெவ்வி, ஒரு சிறுகதை, பழமொழிப்பொருட். போட்டி, பொது அறிவுப் போட்டி குறுக்கெழுந்துப் போட்டி என்று ஆரவாரமான போட்டி அறிவிப்புக்கள் என்பவற்றோடு தமிழ்த்தாய் மன்றத்தின் வெளியீடாக மாற்றம் வெளிவந்துள்ளது

'மாற்றம்' இதழ் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தைவிளைவிக்கும் என்பது காலப்போக்கிலேயேதெரிய வரும் எனினும், மாற்றத்தின் வளர்ச்சிக்கு அதன் உள்ளகத்திலும். மேலும் விரிவாக்கம்செய்வது அதன் வளர்ச்சிக்கு மேலும் உதவக் கூடும்.

## ராக்கிங்

கல்வி வளர்ச்சிக்காக சேவை செய்வதற்கும் நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளேன். இலங்கையில் ராக்கிங்கை தடுப்பதற்காக பீடாதிபதி பதவியை ராஜினாமாச் செய்த முதலாவது நபர் நானாகத்தான் இருக்க முடியும் என்றும் கூறினார்.

★

## மருத்துவபீட மாணவன்

''நாம் ராக்கிங்கிற்கு எதிரானவர்கள். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ராக்கிங் நடைபெற்றால் அதைக் கண்டிக்கிறோம்.'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மருத்து 'பீட மாணவர் ஒன்றியத்தின பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

ராக்கிங் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்

## ஒரு பிடி மண்

அவசியமான பொருட்களை இரத்தினசிங்கமும், அவனது மனைவியும் எடுத்துக் கொண்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்ட

ஜானகி மறுபக்கம் திரும்பிக் கொள்கிறாள்.

''ஜானகி... அப்பாவுக்குக் கோவம் வரப்போகுது சாப்பிடுங்கோ...'' தவமணி அவளை இலேசாக வெருட்டுகிறாள்.

''எனக்கு வேண்டாம்...''

''ஏன் வேண்டாம்...''

''தைப்பொங்கலுக்கு வாங்கித் தந்த சட்டையா...''

''இல்லை...''

''வற்றாப்பளை அம்மன் கோயில் திருவிழாவில் வாங்கித் தந்த விளையாட்டுத் துவக்கா..''

''இல்லை...''

தினசிங்கத்தின் இதயம்வெந்து வெடிக்கிறது...

''ஜானகி...எல்லாத்தையும் விட்டிட்டு மண்ணை மட்டும்... ஏன் எடுத்தனீங்கள்''

''மற்றச் சாமான்களை எங்கையும் வாங்கலாம். அந்த மண்ணை எங்கையும் வாங்கே ... அது எங்கட மண்...''

# வரி விளம்பரம்


### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு 11) துரித மீட்டலுக்கான வினா விடை ஆக்கம்: க சந்திரசேகரம். வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5356)

### புதிய மீரா நாவல்

1992இல் வெளிவந்தவை. சுவடுகள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். 'மீரா பிரசுரங்கள்'' கையிலிருந்தால் பெருமை, படித்துப்பார்த்தால் அருமை. [3584]

### நீம் சுகாதார தூபம்

''நுளம்புத் தொல்லை.. மலேரியாக் காய்ச்சல் பரவுகிறது. பத்திரிகைச் செய்தி ''நீம்'' இருக்கப் பயமேன்? மில்க்வைற் அபயக்குரல் நீம் சுகாதார தூபம். நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை தருகிறது ஓர் இயற்கைப் பாதுகாப்பு. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-5352)

### விற்பனையாகின்றது

சைவநெறி ஆண்டு 10—11. கந்தபுராணம் உற்பத்தி காண்டம், கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறுபடை வீடு) சித்திரம் ஆண்டு 11, வாலி-உரையுடன் விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தக சாலை, யாழ்ப்பாணம். (3545)

### விற்பனைக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு, விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும் வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை யாழ்ப்பாணம். (3546)

### பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ் வீதி, கொக்குவில். தினசரி: 4 பி. ப. —6 பி. ப. ஞாயிறு 10 மு. ப. —2 பி. ப. (3215)

### டில்கா வாச் வேக்ஸ்

### திருமண சேவை

பொருத்தமான மணமகன்/ மணமகள் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் மங்களா ஏஜென்சி கொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை. (3494)

### தவறிவிட்டது

3-11-92அன்று மாலை 6-00 மணிக்கு வைமன் வீதியில் ஸ்ரீ இந்திரா களஞ்சியம் பருத்தித்துறை வீதி) என்பவருடைய பவுண் யானைமுடிக் காப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும், (3578)

### ஆண்டு-6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு6 அனுமதி மாதிரித்தேர்வு 07-11-92 சனி மு-ப 8 00, மு ப 10-00 நடைபெறும் ஆண்டு6 அனுமதிக்கான துரித மீட்டற் பயிற்சியையும். மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (3591)

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் பரீட்சை 1993ற்கான மாதிரித்தேர்வு [ஆண்டு4] 07. 11. 92 சனி மு.ப 8.00, மு. ப 11-00 நடைபெறும். புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சியையும் மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம் [3592]

### தவறிவிட்டது

29-10-92 அன்று கிளாலி-நல்லூர் பாதைக்கும் இடையில் பெறுமதிமிக்க பொருட்கள் அடங்கிய பிரயாணப்பை ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல, 30 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் [3593]

### மோட்டார்சைக்கிள்கள் திருட்டு போயின

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள துரை மோட்டார் சைக்கிள் திருத்துமிடத்தின் உரிமையாளர் கராச்சினுள் நித்திரை செய்யும்போது

னர்

எறும்புகள் கொடிவிட்டுச் செல்வது போல் மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அங்கிருந்து புறப்பட்டு இரத்தினசிங்கம் குடும்பத்தினர் மூன்றாம் நாள் இங்கு வந்து சேர்ந்தனர்.

இரத்தினசிங்கம் இந்தப்பகுதிக்கு மிகவும் பழக்கபட்டவன். மிகவும் இலகுவாகஒருவீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டான்.

புதிதாகக் குடியேறிய வீட்டுச் சுவரில்தான் அவன் இலங்கைப் படத்தைக் கீறினான்.

தான் கீறிய படத்தில், தன்னால் குறிக்கப்பட்ட அலம்பில் பகுதியில் தனது சிந்தனையைப் பதிய வைத்திருந்த இரத்தினசிங்கம் அதிலிருநது விடுபடுகின்றான். வே தனை கலந்த பெருமூச்சொன்று வெளிவருகின்றது.

தனது கிராமச் சிந்தனையிலிருந்து விடுபட்ட இரசதினசிங்கம சில நிமிடங்கள மௌனமாக இருக்கிறான் அவனையறிய மலேயே அவனது எண்ணம் திரும்பவும் ஜானகியின் பக்கம் திரும்புகின்றது.

இருக்கையை விட்டெழுந்த இரசதினசிங்கம் குசினிக்குள் சென்று ஜ னகியின் காலையுணவை எடுத்து வந்து ஜானகிக்குப் பக்கததில் அமர்கிறான்.

''எனக்குப் பசியில்லை...''

''சரி... நீங்கள் சாப்பிட வேண்டாம்... சாமிப்படத்துக்குப் பின்னாலை வைச்ச சாமான் என்னெண்டு சொல்லுங்கோ...''

ஜ'னகி அழத்தொடங்குகிறாள்.

''ஜ'னகி அந்தச் சாமான் போனால் பே'கட்டும்... நான் அதுபோலை வேறையொண்டு வாங்கித்தாறன்.. அது என்ன சாமான் எண்டு சொல்லுங்கோ ..''

''அதை உங்களாலை வாங்கேலாது...'' ஜானகி இப்படிக் கூறியதும் இரத்தினசிங்கம் திகைததுப் போய்விட்டான்.

''நானெல்லோ வாங்கித்தாறது... நீங்கள் சொல்லுங்கோ ..''

''நீங்கள் அதை வாங்கமாட்டியள்...'' திரும்பவும் ஜானகி கூறுகிறாள்-

''எடி நீ இப்ப சொல்லப் போறியோ இல்லையோ...''

''நான் சொல்லமாட்டன்...''

இரத்தினசிங்கம் எழுந்து போய் வாசலில் நின்ற பூவரசு மரத்தில் ஒரு தடியை முறித்துக் கொண்டு வருகிறான்- இரத்தினசிங்கசதின் முகம் சிறிது மாறி இருக்கின்றது-

'நீ இப்ப சொல்லப் போறியா.. இல்லையா'' இரத்தினசிங்கம் கோபமாகவே கேட்கிறான்-

அவள் அழுகிறாவ!

''தாத்தா வாங்கித்தந்த கல்குலேற்றரா''

''இல்லை ..''

''அப்ப என்ன சாமான் எண்டு சொல்லு...'' கையிலிருந்த தடியால் முழங்காலுக்குக் கீழ் ஒருமுறை அடிக்கிறான் இரத்தினசிங்கம்.

''அபபா .''

''என்ன சொல்லு ..''

''அண்டைக்கு இரவு எங்கடை ஊ'ருக்கை ஆமிக்காறன் வாறானெண்டு இருட்டுக்குள்ளை நீங்களும் அம்மாவும் நகையளையும், காசுகளையும், உடுப்புகளையும் எடுத்துக் கொண்டுதானே வந்தனீங்கள்...''

''ஓம் ..''

''நானும் ஒரு சாமான் எடுத்துக் கொண்டு வந்தனான்...அந்தச் சாமானைச் சாமிப்படத்துக்குப் பின்னாலை வைச்சனான் ஒவ்வொரு நாளும், சாமிக்குப் பூ வச்சிட்டு எடுத்துப்பாக்கிறனான்... அதை இண்டைக்குக் காணயில்லை ..''

''ஜானகி நீங்கள் அது என்ன சாமான் எண்டு சொல்லுங்கோ நான் வாங்கித்தாறன்'' இரத்தினசிங்கம் கையிலிருந்க தடியை எறிந்துவிட்டு பரிவோடு கேட்கிறான்.

''அதை நீங்கள் வாங்கமாட்டியள்...'' திரும்பவும் அதே பதிலைக் கூறுகின்ற ள்.

'நீங்கள் சொல்லுங்கோ வன் பாப்பம்...''

''அண்டைக்கு இரவு நான் வீட்டையிருந்து வெளிக்கிடயுக்கை எங்கடை வீட்டு முத்தத்து மண் கொஞ்சம் எடுதது ஒரு பேப்பரிலை மடிச்சு பத்திரமாய் கொண்டு வந்தனான்...அதைத்தான் சாமிப் படத்துக்கு பின்னாலை வைச்சனான்...''ஜானகி அழுதழுது கூறுகிறாள்.

இரத்தினசிங்கம் அதிர்ந்து போய், வலது கையால் நெற்றியைப் பிடித்தபடி திண்ணையில் அமர்கிறான்!... ! உணர்வு வெக்கையில் இரத்...

... லாது அது எங்கட மண்...'' அந்தச் சிறுமி.. ஜானகி கூறுகிறாள்!

இரத்தினசிங்கத்தின் இதயப் பொக்கணையிலிருந்து உணர்வுக்குமிழ்கள் வெடிதது-சொற்களாகி- அவனது குரல் வளைவரை வந்து மரிக்கின்றன... நாக்கு வலு விழந்து, சொற்களுக்கு ஒலி கொடுக்க மறுக்கின்றது!

இன்று காலையில் சாமியறையைக் கூட்டும் போது தற்செயலாகக் கீழே விழுந்து கொட்டுப்பட்டிருந்த அந்த மண் பார்சலை தவமணி கூட்டி வெளியே தள்ளினாள்.

பிஞ்சு உதடுகளை அசைத்து ஜானகி கூறிய அந்த 'முதிர்ந்த வார்த்தைகள்' அவனின் செவிப்பறையில் சிரட்டைத் தணலாய் ஒட்டி எரியவெட்டப்பட்ட ஆமையின் ஈரல் துடிப்பதைப்போல். அவனின இதயம் துடிக்கின்றது!

...ஜானகி சகலதையும் உதறித்தள்ளி விட்டு... தான் பிறந்து, தவழ்ந்து, நடந்து, விளையாடிய அந்த மண்ணின் .. ஒருபிடி மண்ணைக் கொண்டு வந்தாள்...

அன்றிரவு... நானும் தவமணியும் கடைசி நேரத்தில், அந்த இருட்டுக்குள் சேகரித்தது .. நகை, காசு...உடுப்பு... இரத்தினசிங்கத்தின் இதயத்துள் முகாரி இராகம் மௌனமாக ஒலிக்கின்றது! அவனது உதடுகள் துடிக்கின்றன!

' ஜானகி எங்கடை மண் எங்களுக்குத்தான் சொந்தம் அந்த மண்ணிலை எங்களாலை வாழ முடியாமல் போனாலும்... நீங்கள் நிட்சயமாய் அந்த மண்ணிலைதான் வாழப் போறியள் ..

.. ஜானகி ..

.. நீங்கள் பேப்பரிலை மடிச்சுக் கொண்டு வந்த ஒருபிடி மண்...

.. அது ஒருபிடி மண்ணல்ல...

...அது ஒரு பிடி பொன் .. !''

இரததினசிங்கம் கூனிக் குறுகிப் போய்க கூறுகிறான்!

ராக்கிங் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும் போது மாணவர்களை உடல் உள ரீதியாக பாதிக்கும் செயல்களை ராக்கிங் என்றுகூறும் அ'த'பௌ மருதவப பீடத்தில் ஒரு சிலர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளதாகக் கூறினார். ஆனால் பல்கலைக் கழகத்துகரு வெளியில் பேசப்படுவது போல் மோசமான அளவில் ராக்கிங் நடைபெறுவதில்லைஎன்றார். பல்கலைக் கழகத்துக்கு வெளியில் ராக்இங் நடைபெற்றால் அதற்த நாம் பொறுப்பாளிகள் அல்ல என்றும் அவர் கூறினார். ஒரு சில மாணவர்கள் ராக்கிங் செய்வதால் எல்லா மாணவர்களும் ராக்கிங் செய்வதாக வெளியில் பேசப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் ராக்கிங்கை கட்டுப்படுத்துவதற்கு கடந்த காலத்தில் ஒரு குழு நியமிக்கப்படுவது வழக்கம், இம்முறை அவ்வாறு நியமிக்கப்படவில்லை இவ்வாறுகுழு நியமிக்கப்பட்டு ராக்கிங்கிற்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்த நடவடிக்கைகளுக்கு மாணவர் ஒன்றியம் என்ற முறையில் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் தெரிவித்தார்.

மருத்துவபீட வளாகத்திற்குள் சிரேஷ்ட மாணவர்களது நடமாடடங்கள் கட்டுப்படுத்தப்படுவதால் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் ராக்கிங் செய்பவர்களைக் கண்டு பிடிக்க முடிவதில்லை என்றும் தெரிவித்தார்.

ராக்கிங்கைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி சிரேஷ்ட மாணவர்களையும், கனிஷ்ட மாணவர்களையும் ஒருவருடன் ஒருவர் பழகுவதைத் தடுப்பதை மாணவர்கள் விரும்பவில்லை. ''மிக்சிங் அப்'' என்றஅடிப்படையில் கனிஷ்ட மாணவர்களுடன் ஒன்றுசேருவதை மாணவர்கள் வரவேற்கின்றனர் என்றார்,

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருததிக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல் பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

உரிமையாளர் கராச்சினுள் நித்திரை செய்யும்போது அங்கு வந்த சிலர் மூன்று சாளி மோட்டார் சைக்கிள்களை எடுத்துசென்றுள்ளனர். பின்னர் முககிய உதிரிப் பாகங்கள் கழற்றப்பட்ட நிலையில் இரு மோட்டார் சைக்கிள்கள் இருக்க கண்டு பிடிக்கப்பட்டது. எனினும் மற்ற மோட்டார் சைககிள் காணப்படவில்லை, இச்சம்பவம் கடந்த திங்கள் இரவு பத்து மணியளவில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. (86)


## அறிவித்தல்

1991 டிசம்பரில் பேராதனைப் பல்கலைக்சழகத்தால் நடாத்தப்பட்ட கலைமாணிப்பரீட்சையில் சித்தியடைந்த எமது கல்லூரி மாணவர்கள் அனைவரும் 08- 11- 92 காலை 9 00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இயக்குனர்,
பட்டப்படிப்புசகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(5362)

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-06

1987-ம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல் தீவுப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குமார்—அத்தான்** (செல்வநயினார் தயாநந்தரூபன் - திரியாய் - திருக்கோணமலை)

**ஜெறோம்** (சரவரணமுத்து குகதாசன்-கைதடி நுணாவில் யாழ்.)

1988-ம் ஆண்டு கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

**வேதா பவுண்** [தில்லையம்பலம் துரைராஜசிங்கம்- 10-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

1990-ம் ஆண்டு வீமன்காமம் பகுதியில், சிறிலங்காப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**லெப்.சுஜி** [பொன்னுத்துரை நாகஜீவா பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், மன்னார்)

**மதன்** [ராயப்பு அகஸ்ரின் சதீஸ்குமார், புலோப்பளை கிழக்கு பளை]

சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - ஏறார் ஆறுமுகத்தான் குடியிருப்பு வாசியான தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5363)




ஒரு வெற்றிகரமான தாக்குதல் நடைபெற்றது என்பதைக் கேள்விப்படும் போது தமிழீழ மக்களின் உள்ளங்கள் வெற்றிக்களிப்பில் மூழ்குகின்றன. ஆனால் குறிப்பிட்ட தாக்குதலின் வெற்றிக்கு உயிர்நாடியாக இருந்தது வேவுப் பிரிவினரின் திறமை தான் என்ற விடயம் பெரும்பாலும் வெளிக்கொணரப்படுவதில்லை அது போராளிகளுக்குமட்டுமே தெரிந்த விடயம்.


ஒரு தாக்குதல் திட்டத்தை வகுப்பதற்கு வேவுப் பிரிவினரின் பங்குமிகமுக்கியமானது. எதிரி நிலைகொண்டுள்ள பூகோள சூழல். அந்நிலையின் கட்டமைப்பு. எதிரியின் ஆட்பலம், ஆயுதபலம் போன்ற சகல தகவல்களையும் வேவுப் பிரிவினரே சேகரித்துக்கொள்கின்றனர். அத்துடன் தாக்குதலுக்கான சாதக, பாதக அம்சங்களையும் அவர்கள் கணிப்பீடு செய்கின்றனர். வேவுப் பிரிவினரின் இந்தத் தகவல்களின் அடிப்படையில் தான் தாக்குதல் திட்டம் வகுக்கப்படுகிறது. ஆகவே ஒரு தாக்குதலின் வெற்றி வேவுப் பிரிவினரின் திறமையில் பெரும்பாலும் தங்கியிருக்கிறது எனலாம்,

வேவு பார்க்கும் பணி மிகவும் ஆபத்துகள் நிறைந்தது.

ஒரு சிறு அசைவு கூட எதிரிக்குத் தெரியவரில் நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் வேவுப் பணியில் ஈடுபவர் தனது உயிரை இழக்க நேரிடும். அதேவேளை எதிரியும் தனது நடைமுறைகளை மாற்றிக்கொள்வான். அதற்கேற்றவாறு மிகவும் நிதானமாக எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும்.

எதிரியின் காவலரண்களுக்கு மிக அருகில் செல்லும்போது சிலவேளைகளில் எதிரி நித்திரையாயிருப்பான். ஓசைப் கூடியதாக இருக்கும். எதிரியின் ஆயுதங்களை எச்சாணும்போது அதைத் தூக்குமாறு மனம் ஏவும். அந்த ஆயுதத்தினால் வீரச்சாவெய்திய நண்பர்களின் முகங்கள் நினைவுக்கு வரும்' கை துருதுருக்கும் - ஆனால் இதையெல்லாம் வெல்லக் கூடிய மனப்பக்குவத்தை வேவுப்பணியில் ஈடுபடுபவன் பெற்றிருக்க வேண்டும்.

வயிற்றில் நடப்பது போன்ற இப்பணியில் ஈடுபட்டவர்களில் அன்பழகனும் ஒருவன். முகாமில் இவனைக் காண



லெப். அன்பழகன்

வில்லையென்றால் சந்தேகமில்லாமல் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது எதிரியின் ஏதோ ஒரு நிலைக்கு அண்மையில் இவன் நின்று எதிரியின் நடமாட்டங்களைக் கவனிக்கிறான் என்று. அவனைப் பொறுத்தவரை எந்நேரமும் அதுதான் சிந்தனை தனது பொறுப்பு எத்தகையது என்பது அவனுக்கு மிக நன்றாகத் தெரியும்

ஒரு சராசரி மனிதரைவிட இவன் வேறுபட்டவன். ஏனெனில் இவனது அண்ணனான ஈசன் என்பவருக்கு மோ

பட்டது. அந்தச் சம்பவம் நிச்சயம் இவனில் இரத்தத் துடிப்பை ஏற்படுத்தியிருக்கும் ஆனால் இனப்படுகொலைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எமது இனத்தைப்பற்றிய துடிப்பு இவனில் மேலோங்கி இருந்தது. ஆகவே தெளிவாக இருந்தான். இயக்கத்தைப் பொறுத்தவரை எல்லோருக்கும் ஒரே சட்டம், ஒரே நியாயம் என்று. ஆகவேதான் அண்ணன் மறைந்த ஓரிரு மாதங்களுக்குள் இயக்கத்தின் முழுநேர உறுப்பினனாக முடிந்தது

கிளிநொச்சியிலுள்ள திருநகர்தான் இவனது பிறப்பிடம். இயற்பெயர் சசிக்குமார் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவன் க. பொ. த. (சா/த) பரீட்சையில் 5 பாடங்களில் சித்தி எய்தியிருந்தான் கண்ணன் என்று ஊர் மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட இவன் 10-8-90 அன்று இயக்கத்தில் சேர்ந்ததும் அன்பழகனாக உச்சரிக்கப்பட்டான். கிளிநொச்சியிலேயே பயிர்சியும் பெற்றான். அன்றிலிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தினம்வரை கிளிநொச்சிக் காவலரண்களின் சுவாசம் தான் இவனுக்கு.

இவன் மிக அமைதியான சுபாவமுள்ளவன் அந்த சுபாவம் தான் வேவுப்பணியில் ஈடுபடும்போது பெரிதும் உதவியிருக்கிறது. கடமைக்குச் செல்லும்போது இவனுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களை ஒருமுறை சொன்னால் போதும் திருப்பவும் விளங்கப்படுத்தத் தேவையில்லை சொல்லப்படும் விடயம் தொடர்பாக நூறுவீதம் இவனது புலன்கள் வேலை செய்யும், அதனால் தளபதிகளின் நம்பிக்கைக்குரியவனாக இருந்தான். அதே போல பழகும் விதத்தினால் சக போராளிகளின் நன்மதிப்பைப் பெற்றவன் இவன்.

இவனது பணிக்கு உரைகல்லாக இருப்பது ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் நிகழ்ந்த தாக்குதல். இத்தாக்குதலில் 22 காவலரண்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலுக்குச் சிறந்த முறையில் வேவுப்பணிகளில் ஈடுபட்டதற்காகத் தலைவர் பிரபாகரனின் கரங்களால் இவனுக்குப் பரிசு கிடைத்தது. இவனது வாழ்வின் உச்சக்கட்ட ஆனந்தத்தைச் சந்தித்ததும் அன்றுதான்.

மீண்டும் அதே பணி - ஒரு நாள் சுற்றுலா விடுதிப்பக்கமாக எதிர்பாராத விதத்தில் இவன் எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது. இந்நிலையில் முந்

முடியும். இவன் முந்திக்கொண்டான். இரு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே பலியாகினர் எல்லோரும் இவன் தப்பி வந்ததனை நினைத்து மகிழ்ச்சி அடைந்த போது இவன் மட்டும் மகிழ்ச்சியடையவில்லை இந்தச் சந்திப்புத் தனது பணிகளைத் தடங்கலுறச் செய்ததாகவே கருதினான், ஆனாலும் மனம் சோரவில்லை, அடுத்த தாக்குதலுக்குத் தயாரானான்.

அடுத்த தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டது திகதியும் தீர்மானிக்கப்பட்டது இத்தாக்குதலுக்கான பயிர்சியும் நடந்தது. இப்பயிற்சியின் போது இவனுக்கு சிறிய காயமேற்பட்டது. காயத்தின் வேதனைகளுக்கிடையில் சிரித்தபடியே இவன் கூறினான் "எனக்கு காயம்பட்டிட்டுது நான் ரத்தம் சிந்திட்டன் ஆனபடியால் நாங்கள் கட்டாயம் இதில வெல்லுவம்" (ஏற்கனவே ஒரு தடவை இவன் காயப்பட்டவன் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆனையிறவுப் பகுதியில் நடந்த மோதலில் வயிற்றில் காயமடைந்தவன்)

தாக்குதலுக்கான கடைசிப் பணி - இறுதியாக ஒரு முறை உளவுபார்க்க வேண்டும். 30 - 08 - 1992 அன்று இரவு இவன் புறப்பட்டான் - "றெக்கி சரியில்லாட்டி பெடியள் கூடச் செத்துப்போடுவாங்கள். அதுக்காக நான் உள்ள போய்ப்பாத்திட்டு வாறன் கடைசிறெக்கி வடிவா எடுக்க வேணும்" - சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டான் அப்போது தான் அவனைக் கடைசியாகப் பார்த்தது

இலக்கத்தகடு கூட இல்லாமல் சயனைட்டுடன் மட்டுமே புறப்பட்டான். 30ஆம் திகதி முடிந்து 31-ம் திகதியானது. இவன் பணிமட்டும் முடியவில்லை. அதிகாலை 2 20மணி எதிரியின் முள்ளுக்கம்பியை நீக்கி உள்ளே...பட்...பட்..பட்

அன்பழகனைப் பற்றிய இறுதிச் செய்தி இவ்வாறு தான் எமக்குக் கிடைத்தது அந்த உப்பு மண் சுமந்த மாவீரர்களின் பெயருள் இவனது பெயரும் இணைக்கப்பட்டது

"நான் ரத்தம் சிந்திட்டன் - ஆனபடியால் இதில் நாங்கள் வெல்லுவம்" என்ற இவனது வார்த்தை இந்தத் தேசமெங்கும் கேட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது தொடர்ந்து கிடைக்கும் இராணுவ வெற்றிகள் இவனது வார்த்தையை உறுதிப்படுத்துகின்றன

# கதை - கவிதை - கண்ணீர்

"ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் ஒரு கவிஞன் பிறக்கின்றான்" என்றார் ஓர் அறிஞன் இக்கூற்றை முழுமையாக ஏற்பதானால் பாரதிக்குப் பிறகு ஒரு பாரதிதாசன் தோன்றியிருக்க முடியாது நல்ல கவிஞன் எப்பொழுதும் பிறப்பான் அவன் பிறப்பதற்கு நேரம் காலம் கிடையாது. ஆனால் ஆயிரம்பேர் கவிதை எழுதினால் தான் குறைந்தது ஐந்தாறுபேராவது கவிஞர்களாகத் தேறுவார்கள் இன்று சிறுகதை, நவல், கட்டுரை, நாடகம் எழுதுபவர்களைவிட கவிதை எழுதுபவர்களுடைய தொகையே அதிகம் இவர்களுட் பெருப்பாலானவர்கள் கவிதை பற்றிய உருவம் உள்ளடக்கம் எண்ணக்கரு என்பன பற்றிய சிந்தனையின்றியே எழுதித்தள்ளுகிறார்கள் காரணம் கவிதையென்றால் எப்படியும் எழுதலாம் என்ற எண்ணமாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது

இன்று கவிதை எழுதிவருபவர்களுள் தனக்கென ஒரு பாணியை அமைத்து வருபவர் நாவண்ணன், இவர் எழுதிய "தீபங்கள் எரிகின்றன" எனும் நூலை வாசித்து உள்ளம் நெகிழாதவர்களே இல்லையெனலாம் அவர் இப்பொழுது ஈழத்து மலைநாட்டு மக்களுடைய அவல நிலையைச் சித்திரித்து "கதை கவிதை கண்ணீர்" எனும் நூலைத் தந்துள்ளார்.

இவருக்கு முன்னரே பலர் மலைநாட்டை மையமாகக் கொண்டு சிறுகதை, நாவல், கவிதை என்பன புனைந்துள்ளனர் டாக்ரர் நந்தியின் மலைக்கொழுந்து (நாவல்) பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் (நாவல்) சி. வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத்தோட்டத்திலே (கவிதை) என்பன குறிப்பிடத்தக்கன

கவிஞர் நாவண்ணன் மலைநாட்டில் வாழ்ந்தவர் அங்கேயுள்ள மக்களது வாழ்க்கை நிலையை நன்கு அறிந்தவர் அவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்து கொண்டவர் அந்த அனுபவங்களைக் கொண்டு இந்நூலை யாத்துள்ளார்-

நூலின் ஆரம்பத்தில் இவர் பொதுவாக தமிழ்ச் சாதியைப் பற்றிக் கூறும்போது இச்சாதியின் தனித்துவம் எங்கேயிருக்கின்றதெனக் கேலியும் கிண்டலுமாக ஆனால் ஆத்திரத்துடன் கூறுமிடம் சிந்தனைக்குரியது; நயத்திற்குரியது; அது

"இற்றைவரை இச்சாதி
இல்லா நாடு
இருக்கிறது என்று சொலின்
எவரும் நம்பார்
கற்றரையில் மட்டுமல்ல
வாய்ப்பு வந்தால்
சகளத்தில் கூட இவர் கனி
செய்வார்"

மலையக மக்களுடைய கண்ணீர்க் கதையைக் கூறுமிவர் வர்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர் எத்தகைய துன்பங்களுக் கூடாக காடுகளை வெட்டிப் பெருந்தோட்டங்களை யாக்கினர். இவ்வாறு செல்வம் கொழிக்கும் நாட்டை உருவாக்கித் தந்த இவர்களுக்குக் கிடைத்த பரிசு என்ன? கண்ணீரேதான்,

## கவிதை நூல் ஓர் ஆய்வு

இவ்வாறு கூறிச் செல்கிறது இவருடைய நூல்.

இந்தியாவிலிருந்து வரும் போது:

"கொள்ளை நோய் பல
பேரைக் கொறழித்தது"
"கொள்ளி விஷக் காய்ச்சல்
குலமழித்தது"
"பிள்ளை தாயோடு புருஷர் எல்லாம் செல்லும் வழியெல்லாம் செத்து வீழ்ந்தனர்"
"செத்தழிய வீழ்ந்தோரின் பக்கம் தன்னில் சிரட்டையுடன் நீர் வைத்து" சென்றனர்
"சுற்றிவர ஓநாய்கள்
நரிகள் சூழும் சுதந்திரமாய்
அவனுடலை மேயும் தின்னும்"

இத்தகைய கவிதை வரிகள் உள்ளத்தைத் தொடுகின்றன.

தேயிலைத் தோட்டத்திலே

பன்னிரண்டு அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்ட இருட்டறைகளில் தாய் தந்தை பிள்ளைகுட்டி மருமகன் மருமகள் என எல்லோரும் ஒன்றாகவே வாழும் இவர்களுக்கு

"மலசல கூடம் இல்லை
மருத்துவ வசதியில்லை
கலை கலாசாரம் இல்லை
கல்வியோ துளியு மில்லை"

என இரங்குகின்றார்.

தேயிலைத் தோட்டங்களில் துரையை விடக் கொடியவன் கங்காணி இவன் அன்னியன் அல்லன். இவனும் ஒரு தமிழன்தான் இவனுடைய கொடுமைகளைக் கவிஞர் பின்வரு

"கொழுந்து நிறுக்கையிலே
கள்ள நிறை சொல்வான் -
யாரும் எழுந்து வினாத்
தொடுக்கில் எமனாகிக் கொல்வான்"

"வெள்ளத் துரைக்கு வேண்டிய பெண்ணை வெருட்டி மிரட்டி விருப்ப மூட்டியும் கள்ளப் பெண்டாய்க் கற்பை விற்கவும் காசுக்காய் இக்கயவன் செய்வான்"

குட்டக்குட்டக் குனிந்த மக்கள் பின்னர் விழித்தெழுந்தனர். "ஆக்கவும் அழிக்கவும் ஆளுவோரை முடி நீக்கவும் நிறுத்தவும்வலிமை பெற்றார்" தொழிற் சங்கங்கள் எழுந்தன போராட்டங்கள் இடம் பெற்றன இதனால் கோவிந்தன் முதல் ஜெபமணி ஈறாகப் பல தியாகிகள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தனர் இதனைத் தொடர்ந்து வன்செயல்கள் உருவாகின அப்பொழுது சிங்களக் காடையர்கள்

"உடைத்தார் கடை எடுத்
தார் திறை"
"பழித்தார் தலை மழித்தார்
ஐயோ
கிழித்தார் வயிறதையே.."
"கண்ணை நிகர் கற்பை
கணவன்முன் சுவைத்தனரே"
"கொலையாளதைக் கலை
யாகவே
புலையோர் புரிந்தனரே ..."

என உள்ளம் குமுறுகின்றார்

மலையகத்தில் ஏற்பட்ட வன்செயலால் இடம் பெயர்

கலாநிதி
காரைசுந்தரம்பிள்ளை

ந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களை வடக்கும் கிழக்கும் அன்புடன் வாரிவந்து ஆதரித்தன

"இனத்தார் நம் சனத்தார்
நம்
மனத்தார் நம் தமிழர்
எனத்தான் அவர் நினைத்
தார் உடன்
அணைத்தார் வட கிழக்கார்"

எனக் கவிஞர் கூறுமிடம் வரலாற்று முக்கியம் பெற்றதாகும்

இறுதியாக, தமிழர்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட்டால் இலட்சியங்களை வென்றெடுக்கலாம் எனக் கூறிக் கவிஞர் நூலை நிறைவு செய்கின்றார்

இதுவரை வந்த கவிதை நூல்களுள் இது தனித்துவமானது கவிதை நூலாகமட்டுமன்றி மலைநாட்டு மக்களுடைய வரலாற்றை ஓரளவு கூறும் ஆவணமாகவும் கொள்ளக் கூடியது நாவண்ணனுடைய நல்ல பணிகளுள் இது ஒன்று

சிலவேளைகளில் எதிரிநித்திரையாயிருப்பான். ஓசைப்படாமல் அவனது கனரக ஆயுதத்தைத் தூக்கிவரக்

னில் இவனது அண்ணனான ஈசன் என்பவருக்கு மோசடிக் குற்றங்களுக்காக இயக்கத்தால் தண்டனை விதிக்கப்

மாக எதிர்பாராத விதத்தில் இவன் எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது இந்நிலையில் முந்திக் கொண்டவரே உயிர் வாழ

ணுவ வெற்றிகள் இவனது வார்த்தையை உறுதிப்படுத்துகின்றன.

லுமாக ஆனால் ஆதங்கத்துடன் கூறுமிடம் சிந்தனைக்குரியது; நயத்திற்குரியது; அது வருமாறு;

ழுன்தான் இவனுடைய கொடுமைகளை கவிஞர் பின்வருமாறு ஆவேசத்துடன்கூறுர்,

ளக் கூடியது நாவண்ணனுடைய நல்லபணிகளுள் இதுவொன்று

# ராக்கிங்: "தென் ஆபிரிக்க சிறுபான்மை வெள்ளையரின் வெறிபிடித்த செயலை ஒத்தது"



**துணைவேந்தர் துரைராஜா**

உடல், உள ரீதியாக மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் அனைத்தும் ''ராக்கிங்'' என்றுகூறும் அதேவேளை இது ஓர்சமூகச் சீர்கேடான செயல் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா தெரிவித்தார்.

ராக்கிங் தொடர்பாக அவர் தொடர்ந்து கூறும்போது சமூகச் சீர்கேடான செயலான ராக்கிங்கை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒரு செயல். இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மாணவர்களும், பெற்றோரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் ராக்கிங்கில் ஈடுபட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்போம். இந்த வகையில் சம்பந்தப்பட்ட மாணவர்களை அதிகபட்சம் ஒரு வருடத்திற்கு பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநிறுத்தி வைக்க முடியும். பல்கலைக்கழக மாணவர்களும், மாணவர் அமைப்புக்களும் ராக்கிங்கைக் கட்டுப்படுத்தி முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன்வர வேண்டும். இவர்களுடன் மாணவர்களது பெற்றோரும், பொதுமக்களும் இணைந்து இச்செயலை ஒரு சமூகச் சீர்கேடான செயலாகக் கருதி தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். குறிப்பாக மாணவர்களது ஒத்துழைப்பு மிகவும் அவசியம். மாணவர்களது ஒத்துழைப்பு இன்றி ராக்கிங்கை கட்டுப்படுத்துவது கடினம்.

பாடசாலை மட்டத்திலும், பெற்றோர்கள் மட்டத்திலும் இவ்வாறான சமூகச் சீர்கேடற்று செயலாற்றக் கூடிய முன்னுதாரணமாக செயற்படும் மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுயநலம் அற்ற அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரிய சேவை எமது சமுதாயத்துக்குத் தேவை. இதனூடாக மாணவர்கள் மட்டத்தில் சிறந்த பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதனால் பொதுநலமுடைய சமூக உருவாக்கம் ஏற்படும் இதன்மூலம் ராக்கிங் என்ற செயலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

ராக்கிங் என்ற செயலை நிறுத்துவதற்கு தவறினால் அது சமூகச் சீரழிவுக்கு இட்டுச் செல்லும். சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு மிக்கவர்கள் பயிலும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஏற்கனவே ''ராக்கிங்'' பரவியிருக்கிறது. இது மிக விரைவில் பாடசாலை மட்டத்துக்குப் பரவும் சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் முழுச் சமூகமுமே ராக்கிங் என்ற செயலில் பாதிப்படையும் நிலை உருவாகும்.

இலங்கையைத் தவிரப் பொதுவாக வேறு எந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறான ராக்கிங் நடைபெறுவதில்லை என்றும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ராக்கிங் என்பது சமூக சேவை நோக்கம் கொண்டதாக இருக்கும் என்றும் கூறினார். அதற்கெல்லாம் சிரேஷ்ட மாணவர்கள் தமது திறமைகளைக் கொண்டு சாகச நிகழ்ச்சிகளைச் செய்து காண்பித்து அதன் மூலம் பணம் சேகரித்து அந்த நிதி சமூக சேவைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் இலங்கையில் மாணவர்களை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் இம்சைப்படுத்தும் வகையில் ராக்கிங் செய்யப்படுகிறது.

இதனால் எண்பதுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் மரணமடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல மேலும் ஒரு மாணவி தற்கொலை செய்திருக்கிறார். இவற்றைவிட எத்தனையோ மாணவர்கள் மனோநிலை ரீதியாகப் பாதிக்கப்பட்டுச் சித்த சுவாதீனமற்றவர்களாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் கூறினார், அமெரிக்காவில் சங்கங்களில் (CLUBS) புதிதாகச் சேரும் அங்கத்தவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சியின்போது ராக்கிங் என்ற முறையில் சில இம்சைப்படுத்தல் நடப்பதுண்டு. அதைவிட அதிகமாக எமது பல்கலைக்கழகங்களில் உடல், உள ரீதியான இம்சைப்படுத்தல்கள் நடைபெறுகிறது. இந்த வியாதி அமெரிக்காவில் கிளப்களில் காணப்படுவதற்கு அடுத்ததாக எமது பல்கலைக்கழகங்களில்தான் காணப்படுகின்றன என்றார் அவர்.

★

**பேராசிரியர் பாலசுப்பிரமணியம்**

"மாணவர்களது அடிப்படை உரிமைகளை மீறும் செயல் எதுவாக இருந்தாலும் அதை 'ராக்கிங்' என்றுதான் கருத வேண்டும்" இது யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் 'ராக்கிங்' என்பதற்குக் கூறும் வரைவிலக்கணம்,



யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ராக்கிங் தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது என்றும் இது குறித்து பெற்றோரும் ஏனையோரும் எமக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்களை விசாரணை செய்தபோது ராக்கிங் நடைபெற்றதை உறுதிப்படுத்தமுடிந்தது என்றும் பேராசிரியர் சுப்பிரமணியம் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறும்போது மாணவர்களது அடிப்படை உரிமைகளை மீறும் ராக்கிங் என்ற செயலை நாம் அனுமதிக்க முடியாது. குறிப்பாக மருத்துவ பீடாதிபதியாக நான் இநக்கும் வரைக்கும் ராக்கிங் நடைபெறுவதை அனுமதிக்க மாட்டேன். இதை நான் எந்த வகையிலும் தடுப்பேன் என்று உறுதியாகக் கூறினார்.

உள ரீதியாகப் பாதிப்புக்கள் ஏற்படக் கூடாது என்பதற்காகவே பாலர் பாடசாலை மாணவர்களை பெற்றோர் பாடசாலைக்குத் தினமும் கூட்டிச் செல்கிறார்கள். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கும் புதிய மாணவர்களைப் பெற்றோர் தினசரி அழைத்து வரவேண்டியுள்ளது. இதேபோன்ற நிலை பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருக்கக் கூடாது. இது ராக்கிங் காரணமாக உருவாகியிருக்கும் நிலை. பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளக உணவுச்சாலையில உணவருந்த முடிவதில்லை. வீட்டுக்கு செல்லும்போது கூடசிரேஷ்ட மாணவர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் செல்ல வேண்டும். இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுவதைத் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ள முடியாது

ராக்கிங்கை கட்டுப்படுத்துவதற்கு கடந்த ஆண்டுகளில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு ராக்கிங்கை கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. பொதுவாக இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் ஒரு சிறு பகுதியினர் இச்செயலில் ஈடுபடுகின்றனர் இவர்களின் செயற்பாடு பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இச்சிறுபான்மையினரது செயற்பாடு தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை மக்களுக்கெதிராக வெறி பிடித்த வெள்ளை இன சிறுபான்மையினரின் நடவடிக்கை போன்றதாக உள்ளது. கடந்தகாலத்தில்ராக்கிங்கைத் தடுப்பதற்காகமேற்கொள்ளப்பட்டநடவடிக்கைகள்அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

எனக்கும் பீடாதிபதிப் பதவி ஒன்றும் பெரிதல்ல. பீடாதிபதிப் பதவியை நான் துறந்தாலும் எனது சேவை பல்கலைக்கழகத்திலும் மற்றும் எனது மண்ணுக்காகவும் தொடரும். எனது பதவிவிலகல் மூலம் மருத்துவ பீட மாணவர் விரிவுரைகளில் பாதிப்பு ஏற்படாது என்றார் அவர்.

இதனால் நான் ராக்கிங் தொடர்பாக சில தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தேன். இதை மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் நான் எனது பீடாதிபதி பதவியை ராஜினாமா செய்துள்ளேன். ராக்கிங்கிற்கு எதிரான எனது நடவடிக்கைகள் தவறானவை என்பதற்காக நான் ராஜினாமாச் செய்யவில்லை. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமையவே நான் ராஜினாமாச் செய்தேன் என்று தெரிவித்தார். மேலும் எனது ராஜினாமா ராக்கிங் தொடர்பாகப் பல தரப்பினரையும் சிந்திக்கத் தூண்டியிருக்கிறது. ராக்கிங்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

சந்திப்பு:
**கணேஷ்**

# சிறுகதை

# ஒரு பிடி மண்

## கே. ஆர். டேவிட்

இரத்தினசிங்கத்தின் குடும்பத்தில் ஜானகி 'கடைக்குட்டி' இந்தக்காரணத்தினால் ஜானகி கவலைப்படுமளவிற்கு அவள் என்றுமே நடந்துகொண்டதில்லை.

ஆனால் இன்று —

கண்கள் சிவந்து, வீங்கிப் போகும் அளவிற்கு அவள் அழுதுவிட்டாள். இன்னும் அவளது சோகம் தீரவில்லை.

ஜானகி ஏன் அழுகின்றாள்...? அவளது குடும்பத்திலுள்ள எவருக்குமே தெரியவில்லை. ஜானகியின் தகப்பனான இரத்தினசிங்கம்கேட்டு, தாயான தவமணி கேட்டு, ஒரே அக்காவான ஜமுனா கேட்டு, ஒரே அண்ணனான செல்வரத்தினம் கேட்டு ... அவள் கூற மறுத்துவிட்டாள்!

நேரம் பத்து மணிக்குமேலாகிவிட்டது, காலை ஏழு மணிக்கு அழத் தொடங்கியவள் இதுவரை சோகமாகவே இருக்கின்றாள்.

வீட்டின் முன்மண்டப வாசலில் அமர்ந்து, படிக்கட்டில் இரு கால்களையும் வைத்து, இரண்டு கைகளிலும் நாடியைப் பதித்தபடி அமர்ந்திருக்கின்றாள்.

இவள் ஏன் அழுகிறாள்?

சாமியறையில், சாமிப் படத்துக்குப் பின்னால் அவள் வைத்திருந்த ஏதோ ஒரு பொருள் இன்று காலையில் காணாமல் போய்விட்டது.

இதைமட்டும்தான் அவள் கூறினாள், இப்போதும் கூறுகிறாள்.

அது என்ன பொருள் ...... அதை மட்டும் அவள் கூற மறுக்கின்றாள்.

வயது பதின்மூன்று பொது நிறம் தளதளப்பான உடல் தெத்துப் பல்லு, ஆண்களைப் போல் கட்டையாக வெட்டப்பட்டு, தோள்மூட்டோடு சுருண்டு போயிருக்கும் கூந்தல், படிப்பில் மிகவும் கெட்டிக்காரி, கூர்மையான கண்கள்!

காலை ஏழு மணிக்குப்பிறகு இதுவரையும் அவள் யாருடனும் கதைக்கவில்லை. சிறிது நேரம் குசினி மூலைக்குள் குந்தியிருந்தாள். அதன்பின்பு அறைக்குள் படுத்திருந்தாள், இப்போது முன் மண்டப வாசலில் இருக்கின்றாள்

முன்மண்டபத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் ஜானகியின் தாய் தவமணி அமர்ந்திருக்கிறாள். மண்டபத்தின் இடதுபக்கச் சுவரில் நான்கடி உயரமானதொரு இலங்கைப் படத்தைக் கீறிக்கொண்டு நிற்கின்றான் இரத்தினசிங்கம்.

நான்கடி உயரமான அந்த இலங்கைப் படம் கீறப்பட்டு அதில் தமிழீழப் பிரதேசத்தை நீலச் சோக்கினால் தடித்தவரிகளால் நிறம் தீட்டி. கரையோரப் பகுதிகளிலுள்ள இடங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றது

சிலஅடிகள் பின்நோக்கிதள்ளி நின்று தான் கீறிய படத்தை பார்க்கின்றான் இரத்தினசிங்கம். படத்தின் புறவரிக் கோட்டில் அவனது பார்வை ஆமைவேகத்தில் நகர்ந்துவர... தானே தலையை ஆட்டித் தனது திறமையை ஆமோதிக்கிறான்

''தவமணி தமிழீழப் பகுதியைப் பிரிக்கின்ற கோட்டை நான் நீலச் சோக்காலை கீறிப் போட்டன்...'' கதிரையில் அமர்ந்திருந்த தவமணியிடம் கூறுகிறான்.

''நல்லாயிருக்கு...''

''அப்படியில்லை . தமிழீழத்தைக் காட்டுகின்ற கோட்டைச் சிவப்புச் சோக்காலை கீறியிருக்க வேணும்...''

''ஏன்...''

''ஏனெண்டால் தமிழீழப் பிரதேசம் தமிழர்களுடைய இரத்தத்தினால் தான் கீறப்பட்டுக் கொண்டிருக்கிறது ''

நடக்கின்ற போராட்டத்தையும், அதில்சங்கமித்துக்கொண்டிருக்கின்ற தியாகங்களையும் உள்ளடக்கி மிகவும் அர்த்தபுஷ்டியாகக் கூறுகின்றான் இரத்தினசிங்கம்.

தலையை அசைத்து, இரத்தினசிங்கத்தின்கருத்தை ஏற்றுக் கொள்கிறாள் தவமணி.

தமிழீழப் பரப்பில் தனது பார்வையைச்செலுத்தியிருந்த இரத்தினசிங்கம் அதிலிருந்து விடுபட்டு, வாசலில் அமர்ந்திருந்த ஜானகி மீது செலுத்துகின்றான்.

ஜானகி என்ன பொருளைச் சாமிப்படத்துக்குப் பின்னால் வைத்திருப்பாள்...? அவனது சிந்தனைத்திரிகை சுழல்கின்றது.

ஜானகி இதுவரையும் ஒன்றும் சாப்பிடாததால் இரத்தினசிங்கமும், தவமணியும் எதையும் சாப்பிடவில்லை. தான் சாப்பிடாமல் இருப்பதோ - தவமணி சாப்பிடாமல் இருப்பதுபற்றியோ அவன் சிந்திக்கவில்லை. ஜானகி சாப்பிடாமல் இருப்பது அவனது இதயத்தைக் குத்திக்கொண்டிருக்கிறது.

''ஜானகி... சாப்பிடுவமா...''

''எனக்கு வேண்டாம்...''

''ஐஸ்கிறீம் வாங்கக் காசு தரட்டா...''

''வேண்டாம்''

ஜானகியோடு ஏதாவது மனக்கசப்பு ஏற்பட்டால், ஐஸ்கிறீமைக் காட்டித்தான் இரத்தினசிங்கம் சமாளிப்பான். தன்னுடைய இறுதிப் பாணத்தையும் இரத்தினசிங்கம் பிரயோகித்து விட்டான் அதிலும் தோல்வி.....

''ஜானகி.. சாமிப்படத்துக்குப் பின்னாலை வைச்ச சாமானையாவது சொல்லுங்கோ...'' இரத்தினசிங்கம் கேட்கிறான். ஜானகி மௌனமாக இருக்கின்றாள். இரத்தினசிங்கத்திற்குக் கோபமும் வருகின்றது ஜானகி கடைக்குட்டி... அவளிடம் தன் கோபத்தைக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை. பெருமூச்சோடு கதிரையில் அமர்கின்றான்.

சில நிமிடங்கள் மௌனமாக இருந்தவன் திரும்பவும் தனது பார்வையைச் சுவரில் கீறப்பட்ட படத்தில் பதிக்கின்றான்.

தமிழீழம் - தமிழர் தாயகம்... இதயத்தின் மௌன மொழி - முகாரியில் ஒலிக்கின்றது ஏக்கம் நிறைந்தபெருமூச்சொன்று வெளி வருகின்றது.

''ஜானகி சாப்பிடாமல் இருக்கிறாள் பத்து மணி ..... எப்பிடியாவது சாப்பிட வையுங்கோ'' தவமணி கூறுகிறாள் இரத்தினசிங்கத்தின்சிந்தனை தடை'பட்டு, மீண்டும் ஜானகியில்நங் கூரமிடுகின்றது

இன்று காலை ஏழு மணிக்குக் குளித்து விட்டு வாசலில் நிற்கின்ற நித்தியகல்யாணி மரத்தில் சிலபூக்களைப் பிடிங்கிக் கொண்டு சாமியறைக்குள் சென்றாள்.

இந்தப் பழக்கம் அந்தக் குடும்பத்திலுள்ள சகலரிடமும் உண்டு.

சாமியறைக்குள் சென்றவள் சில நிமிடங்களில் அழுது கொண்டு வந்தாள். வந்தவள் நேரடியாகக் குசினிக்குள் சென்று தாயோடு வாக்குவாதப்பட்டு அழத் தொடங்கினாள்.

''நான் சாமிப்படத்துக்குப் பின்னாலை வைச்ச சமான் எங்கை . .'' இப்படித் தான் அவள் திரும்பத் திரும்பக் கேட்டாள்.

''என்ன சாமான் வைச்சனீங்கள்'' தவமணியும், பல தடவைகள் கேட்டுவிட்டாள் ஜானகி பதில் கூறவில்லை.

அழுகை... திரும்பத்திரும்ப அழுகை!

அவளுக்கு மிகப்பிடித்த, அனைத்துக்கும் மேலால் அவள் நேசிக்கின்ற - அவள் இழக்க விரும்பாத ஒன்றைத் தான் இழந்து விட்டாள் என்பதை இரத்தினசிங்கமும், தவமணியும் உணர்கின்றனர். ......அது என்ன பொருள் என்பதை அவர்களால் ஊகிக்க முடியவில்லை.......

அவளுடைய பிறந்த தினத்தன்று இரத்தின சிங்கம் சிங்கப்பூர் சங்கிலி ஒன்று வாங்கிக் கொடுத்தான் அன்று பின்நேரமே அந்தச் சங்கிலியை ஜனாகி தொலைத்து விட்டாள் தொலைந்த அந்த நேரத்தில் மட்டும் அவள் அழுதாள் ..... அதன் பின் மறந்து விட்டாள்.

இன்று .. இழந்த அந்தப் பொருளை மறக்கமுடியாமல் அழுகின்றாள்.

கண்கள் சிவந்து வீங்கி .....

பவுண் சங்கிலியைக்கூட இலேசாக மறந்துபோன அவளால், இன்று இழந்த பொருளை மறக்க முடியவில்லையென்றால் ..

பவுணை விட மேலான பொருளா?...

''ஜானகி இஞ்சை வாம்மா' இரத்தினசிங்கம் மிகவும் வாஞ்சையோடு அழைக்கின்றான

''நான் வரமாட்டன்...''

'நீங்கள் வரவேண்டாம் சாப்பிடுங்கோ''

''வேண்டாம்''

ஜானகியிடம் எந்த மாற்றமும் இல்லை.

அமைதி நீடிக்கின்றது.

திரும்பவும் இரத்தினசிங்கத்தின் பார்வை இலங்கைப் படத்தில் நங்கூரமிடுகின்றது தமிழீழத்தின் கரையோரப் பிரதேசங்களில் அவனின் பார்வை ஊர்ந்து வருகின்றது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, அம்பன், செம்பியன்பற்று, சுண்டிக்குளம், புதுக்குடியிருப்பு. நந்திக்கடல், முல்லைத்தீவு, முள்ளியவளை, அலம்பில் ..... ஊர்ந்துவந்த அவனது பார்வை அலம்பில் பகுதியில் தரித்து நிலையாக நிற்கின்றது...

அலம்பில் -

இப்பகுதியில் அமைந்துள்ள 'செம்மலைக்' கிராமம் ......
இங்குதான் இரத்தினசிங்கம் பிறந்து வளர்ந்தான். பிறந்தது முதல் இன்றிலிருந்து கடைசிப் பத்து நாட்களுக்கு முன்புவரை அந்தக் கிராமத்தில்தான் அவனது குடும்பம் வாழ்ந்து வந்தது

செம்மலைக் கிராமத்திலிருந்து அவனது குடும்பம் இடம் பெயர்ந்து இன்று பத்தாவது நாள்!

இரத்தினசிங்கத்துக்கு இப்போது நாற்பத்தைந்து வயது. இவனின் தகப்பன். பாட்டன், பூட்டன் இவனது குலக்கொடி தளிர்விட்டதே செம்மலைக் கிராமத்தில் தான்.

இரத்தினசிங்கம், குடும்பம் செம்மலைக்கிராமத்தைவிட்டு வெளியேறிய அந்த இரவு ... அதிகாலை மூன்று மணிக்கு மேலிருக்கும் ..

நெற்கதிரின் சுமையைத் தாங்கமுடியாத நெற்பயிர்கள் வளைந்து பூமியை முத்தமிடுகின்ற செழிப்புமிக்க வயலுக்குள் எருமை மாடுகள் நுழைந்ததுபோல் - செம்மலை .. கிராமத்துள் இராணுவத்தினர் புகுந்துவிட்டனர். இருளோடு இருளாக .. ஆமை வேகத்தில் இராணுவத்தினர் புகுந்து வருவார்களென்று யாருமே எதிர்பார்க்கவில்லை

விளக்கை எரிய வைத்தால் அந்த வெளிச்சத்துக்கு இராணுவத்தினர் வந்துவிடக்கூடும் என்ற பயத்தினால் இருட்டுக்குள் மிகவும் கஷ்டப்பட்டு

[ 2ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். பல்கலை உள்வாரி - வெளிவாரி விவகாரம்

### கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ரவிச்சந்திரன்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவர் அனுமதி சென்ற வருடம் பிரகடனப்படுத்தப்பட்டது. என்றாலும் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவர்கள் சில சிக்கலான பிரச்சினைகளுக்கு இன்று முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். இது குறித்து பொதுஜன அபிப்பிராயமும் உருவாகியுள்ளது. இப் பிரச்சினை சம்பந்தமாக கலைப்பீட மாணவர் சங்கத் தலைவர் மற்றும் வெளிவாரி மாணவர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் தரப்படுகின்றன.

சந்திப்பு: மதன் -

எழுதப்பட்டவை போல எழு...

எனத் தரப்படும் காகிதாதி...

## எனக்குள் நான்

'செல்' கூவி துயிலெழுப்பும் காலம் !
''சேவல் கூவிட்டுது எழும்பன் மோனை''
எனச் சொல்லும் ஆச்சி
''செல் கூவிக் கேக்குது எழும்பன்''
என்கிறாள் நடுச்சாமத்திலும்.

அவசரமாய் பஸ்ஸில் நான்
வன்னிக்குப் போய் அலுவல் முடித்து
அடுத்த பஸ்ஸில் யாழ். திரும்புவேன்.
அன்று மாலையே -
நண்பருடன் கீரிமலை போய்



இரண்டாயிரம் மாணவர்களைக் கொண்ட கலைப் பீடத்தின் பொது அறையில் முப்பது கதிரைகள் கூட இல்லை. இந்நிலையில் வெளி மாணவர்களையும் பொது அறையில் அனுமதித்தால் அது நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தும்.

பல்கலைக் கழக நிர்வாகம் அடையாள அட்டைகளை வெளிவாரி மாணவர்களுக்கு வழங்கக்கூடாது என்று நாம் சொல்லவில்லை. அதனை வழங்கினால் உள்வாரி மாணவர்களின் அடையாள அட்டைக்கும், வெளிவாரி மாணவர்களின் அடையாள அட்டைக்குமிடையில் வடிவமைப்பில் வித்தியாசம் இருக்கவேண்டும். ஏனெனில் ஒருசில மாணவர்கள் அதனைத் துஷ்பிரயோகம் செய்யும்போது அது முதலில் உள்வாரி மாணவர்களைப் பாதிக்கும். அதாவது வெளிவாரி மாணவர் சிலர் அடையாள அட்டையைக் காட்டி 'றாக்கிங்' செய்யும் போது இதனால் பாதிக்கப் படுகிறவர்கள் உள்வாரி மாணவர்கள் தான் என்று கலைப் பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பி. ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

நாங்கள் வெளிவாரிப் பட்டப் படிப்பை எதிர்க்கவில்லை. ஆனால் வெளிவாரிப் பட்டப் படிப்புக்குள்ள தேவைகளை வழங்கும்போது, அதனால் எங்கள் உரிமைகள் பாதிக்கப் படுமானால் நாங்கள் அதனை எதிர்க்கிறோம். நூலக வசதிகளை வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு மறுக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உள்வாரி மாணவர்களாகிய எங்களுக்கு நிர்வாகம் போதியளவு நூலக வசதி செய்துதர முடியாத நிலையில் வெளிவாரி மாணவர்களைப் பல்கலைக் கழக நூலகத்தில் ஈடுபடச் செய்வதை நாம் கண்டிக்கிறோம், நிர்வாகத்தில் திட்டமிடாத செயற்பாடு எங்களுக்கும் வெளிவாரி மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள்

படுவதை நான் நிராகரிக்கிறேன். பல்கலைக் கழக அனுமதிக்குக் காரணமாக அமைவது வெட்டுப் புள்ளியே. பின்தங்கிய மாவட்ட வெட்டுப் புள்ளிகளிலும் அதிக வெட்டுப் புள்ளி எடுத்த யாழ்ப்பாண மாவட்ட மாணவர் பலருக்குப்பல்கலைக்கழகஅனுமதி கிடைக்கவில்லை என்று கூறினார்.

வெளிவாரிப்பட்டப்படிப்பு, தொழிலாளர் கல்வி ஆகியவற்றை நடத்தும் நிர்வாகம் அவர்களது தேவைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு அக்கறை செலுத்துவதில்லை. மாறாக எங்கள் தேவைகளுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச பொருள்களை அவர்களுக்குக் கொடுப்பதை நாம் எதிர்க்கிறோம். அவர்களுடைய சேவைகள் அரசினால் மறுக்கப்படும்போது அவர்களுக்காகப் போராட

★ குடும்பத்தில் - உனைவிட
மூத்தவர், இளையவர்
கல்வி - இப்புள்ளிகளால்
கழுத்தறுக்கப்பட்ட
வேளை எல்லாம் - நீ
ஆனந்த மிகுதியால்
களியாட்டம் செய்திருப்பாய்
என்று தெளிவாய்த் தெரிகிறதே...

★ ......
எம்முடன்
பகிர்ந்துண்டு படித்தவனே
பரமவைரியாய் நினைத்து
சிதறிய மைத்துளிகளால்
எழுதிய சொல்லடிகள்
எம்மைச் சிந்திக்க வைக்கிறது

(மாணவர் ஒருவரின் இதயத்தில் ஊற்றெடுத்து தட்டச்சில் பதிக்கப்பட்டு பல்கலைக் கழகத்தில் இரகசியமாக விநியோகிக்கப்படும் நீண்ட கவிதையின் சில அடிகள் இவை.)

ஏற்படுத்தி எங்களையும்வெளிவாரிமாணவர்களையும்மோத வைக்கும் என்றார்.

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறமுடியாதவர்கள் வெளிவாரிப் பட்டப் படிப்பைத் தொடர்வதற்குத் தகைமையற்றவர்கள் எனக் கூறப்

வும் தயாராக இருக்கிறோம் என்று விபரித்தார்.

சுவரொட்டிகள் சுலோகங்கள்இரவிலேயேஒட்டப்பட்டும் எழுதப்பட்டும் உள்ளன.இவை கலைப்பீடாதிபதி நிர்வாகத்துக்கு எதிராக வேறு சிலரால் முன்னர் நடந்த சம்பவங்களில்

எழுதப்பட்டவை போல எழுதப்பட்டிருக்கலாம். ஏனெனில் மாலை 6 மணிக்குப்பின்னர் பல்கலைக் கழக வளாகத்துக்குள் மாணவர்கள் செல்வதை அனுமதிப்பதில்லை. அப்படியிருக்க நாம் எப்படி அதற்குப் பொறுப்பேற்கமுடியும்?என்று கேட்டார்.

வெளிவாரி மாணவர்கள் உள்வாரி மாணவர் மேல்வைத்திருக்கும் தவறான கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு கூறிய அவர்; வெளிவாரி மாணவர்களோ, உள்வாரி மாணவர்களோ கலைப்பீடாதிபதியின் தவறான நடவடிக்கைகளுக்குப் பலிக்கடா ஆவதை கலைப்பீட மாணவர் தலைவனாகிய நானும் ஒன்றிய நிர்வாக சபையும்வன்மையாக எதிர்க்கிறோம் என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்தஅவர்;

உள்வாரி மாணவருக்கு எனத் தரப்படும் காகிதாதிகள்நிர்வாகத்தால் வெளிவாரி மாணவருக்குப் பயன்படுதக் கூடாது.எங்கள் இறுதி ஆண்டு மாணவர்ஆய்வுக் கட்டுரைக்கு, வெள்ளைத்தாள் மறுக்கப்பட்டன தங்களுடைய தேவைகளுக்கே 5 கிலோ வெள்ளைத் தாள் அரசு அனுமதித்துள்ளது என்று கூறி நிர்வாகம் எமக்கு வெள்ளைத்தாள் தரவில்லை. எங்களுக்கே வெள்ளைத்தாள் தரமுடியாத நிர்வாகம் எங்களுக்கு கிடைக்கிறவெள்ளைத் தாள்களை வெளிவாரி மாணவர்களுக்குக் கொடுப்பதுதவறு என்றே கூறுகின்றோம்.

தொழிலாளர் கல்வி. புறநிலைப்பாடங்கள் (Extra-Mural Studies) நடைபெறலாம் எழுதப்பட்ட சுவரொட்டிகளுக்கும், சுலோகங்களுக்கும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கும்எவ்விததொடர்பும் இல்லை என்றார் அவர். ★

## தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத

# வெளிவாரி மாணவர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி மாணவர்களாகிய எங்களுக்கு எதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளும், எழுதப்பட்ட வாசகங்களும் உள்வாரி மாணவர்கள் சிலரின் மனதில் சுயமாகவே தோன்றினவா அல்லது வேறேதும் தோற்றப்பாட்டின் பொது விளைவா என்பதினைப் பிரித்துக் காண்பது சுலபமான காரியமன்று.

இப்படி கூறுகிறார்தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத வெளிவாரி மாணவர் ஒருவர்.

இந்த விவகாரத்தில் உள்வாரி மாணவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? எங்களுக்கு எதிராகச் 'சுவரோவியம்' வரைவதற்கு என்ன அவசியம்? வெளிவாரி மாணவர்கள் பட்டப்படிப்பு விவகாரம் உள்வாரி மாணவரிடையே காலப் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்து எங்கள் மீது எதிர்ப்புக் கணைகளைத் தொடுத்திருக்கிறார்கள். எதிர்காலததில் தொழில் வாய்ப்புக்களில் நாங்கள்அவர்களை இக்கட்டில் மாட்டி விடுவோம் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும். இந்த விஷயத்தில் நாங்கள் உண்மையைச் சொல்ல வேண்டும். எங்களில் பலர் தொழில் பார்ப்பவர்கள். அதிலும் அநேகர் ஆசிரியர்கள். ஆகவே தொழில் வாய்ப்புக்களில் உள்வாரி மாணவருக்கு எதிரான சக்தியாக நாம் இருக்கப் போவதில்லை என்றார் அவர்.

4A = 3S+ 1F என்றுகுதர்க்கமான சமன்பாடு ஒன்று எழுதி பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்கள். தரப்படுத்தல் வேண்டாம் என்பது தான் தமிழர்களாகிய எமது கோரிக்கை. சமன்பாடு மூலம் எம்மைத் தரப்படுத்த முயற்சிப்பது தவறான காரியமா

( 5ஆம் பக்கம் பார்க்க)

நண்பருடன் கீரிமலை போய்
தீர்த்தமாடி கும்மாளமடித்து -
அடுத்ததாய் 'கசோரினா' வந்து
கடலில் குளித்து
கரைமணலில் கால் புதைய
ஓடித் திரிந்து -
அடிபட்டு 'இராவணன் மீசை' பொறுக்கி
''வேறு எங்கு போவோம்?''
என்று கேட்க -
''காங்கேசன்துறை'' என்பான்
ஒரு நண்பன்
''சரி என்று புறப்படுகையில் -

'''செல்' வந்து விழுகுது எழும்பு
என்ன இப்படி கண்டறியாத நித்திரை''
ஆச்சி எழுப்புவாள்
கனவு கலையும்

ஏக்கத்தில் எழுந்தமர்ந்து யோசிப்பேன்
அருகில் எங்கோ
சத்தமாய் 'செல்'லொன்று வந்துவிழும்
சே .. என்ன வாழ்க்கை ..?
வாழ்வினை குலைத்த
பகைவன் மீது கோபம் வரும்

எல்லைகளில் மட்டுமா
எம் மண்ணின் நடுவேயும்
எதிரியின் வேலிகள்

வேலிகளை அறுக்க வேண்டும்
எதிரிகளை துரத்த வேண்டும்
ஆத்திரத்தில் கவிதைகள் புனைவேன்
அல்லது கதை எழுதுவேன்
நான் வேறு என்ன செய்வேன்—?

வெளியே வீதியில் -
பிஞ்சும் தளிர்களும்
படைக்கலன் ஏந்தி
அணியணியாய் போகும்
மூர்க்கமாய் எதிரியை நோக்கி பறக்கும்

எனக்குள் நான்

தலை குனிவேன்.

- விவேக் -

உலகிலுள்ள பழம்பெரும் இனங்களுள் ஒன்று குர்டிஷ் இனம். இது 3000 ஆண்டு காலத்திற்கும் மேற்பட்ட வரலாற்றை உடையது. அரசற்ற இவ்வினம் துருக்கி, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளின் பிடிகளின் கீழ் நசுக்கப்பட்டு வருகின்றது. இந்த நாடுகள் அனைத்தும் குர்டிஷ் இனத்தின் தனிநாட்டுப் போராட்டத்தை எதிர்க்கின்றன. இதில் சம்பந்தப்படும் ஒவ்வொரு நாடும் குர்டிஷ் போராட்டத்தை தனித்தனியே தத்தம் நாடுகளிற்கும் எதிரானதாகப் பார்க்கின்றன.

ஏறக்குறைய இதே நிலை தான் தமிழர் சம்பந்தமாக இலங்கை, இந்திய அரசுகளின் நிலைப்பாட்டில் உண்டு. இவ்வாறாக தமிழகத்தின் எழுச்சியைக் கண்டு இலங்கை அரசு அஞ்சுகின்றது. ஈழத்தமிழரின் தனிநாட்டுப் போராட்டத்தைக் கண்டு இந்திய அரசு அஞ்சுகின்றது. இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியாவுடனும் தமிழகத்துடனும் விருப்பு வெறுப்புக்கப்பாற் சம்பந்தப்பட வேண்டியதாயிற்று.

ஆனால் இதில் எழக்கூடிய சிக்கலையும் கடினத் தன்மையையும் பற்றி ஈழத்தமிழ்த் தலைவர்கள் ஆரம்பத்தில் இருந்தே புரிந்து வைத்திருந்தார்கள் என்றில்லை. ஆனால் இந்திய - இலங்கை அரசுகள் இதனை ஆரம்பத்திலிருந்தே புரிந்து வைத்திருந்தன. ஜெயலலிதாவின் ஆட்சியின் கீழான தமிழர் பற்றிய பிரச்சினைகளைத் துல்லியமாக விளங்க இதுபற்றிய ஒரு பரந்த பின்னணி அவசியமானது.

ஈழத்தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் ஆரம்பத்திலிருந்தே இந்திய அரசை முன்னுதாரணம் மிக்க ஒன்றாக எண்ணினர். இந்திய தேசியப் போராட்டக் கால கட்டத்தில் யாழ்ப்பாணத் தேசிய காங்கிரஸ் இந்தியத் தேசியத் தலைவர்களைப் பெரிதும் வரவேற்றது. சுதந்திரத்தின் பின்பு திராவிட இயக்கம் தோன்றியதும் தமிழரசுக்கட்சி தமிழகத்தலைவர்களைப் பெரிதும்வரவேற்றது. யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் 1920 களின் பிற்பகுதியிலும் 1930 களின் முற்பகுதியிலும் இந்தியத் தேசியத் தலைவர்களை அழைத்து பெரும் மாநாடுகளை யாழ்ப்பாணத்தில் நடாத்தியது போலவே தமிழரசுக்கட்சி தமிழகத்தலைவர்களை அழைத்து தமிழரசுக்கட்சியின் மாநில மாநாடுகளை நடாத்தியது. ஆனால் இங்கு இந்தியாவின் தேசிய மட்டத் தலைவர்களுக்குப் பதிலாக மாநில மட்டத்தலைவர்களை அழைக்கும் ஒரு யதார்த்தம் காணப்பட்ட போதிலும் தமிழரசுக் கட்சித் தலைவர்களைப் பொறுத்தவரை இந்திய மத்திய அரசு ஈழத் தமிழருக்குச் சாதகமற்ற கோரிக்கை கொண்டுள்ளது என்ற அடிப்படைஉண்மையைஒரு போதும் புரிந்து வைத்திருக்கவில்லை. ஒரு புறம் திராவிட இயக்க எழுச்சியைப் பெரிதும் ஆதரித்தவர்கள். அதே போலவே இந்திய மத்திய அரசின் தலைவர்களையும் பெரிதும் ஆதரித்தனர் ஆனால் இதில் இந்திய மத்திய அரசும் இலங்கை அரசும் விழிப்புடனே இருந்தன.

1967 ஆம் ஆண்டு அண்ணாத்துரை தலைமையில் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் இலங்கை அரசு அச்சமடைந்தது. சிங்களத் தலைவர்களும், தென்னிலங்கைப் பத்திரிகைகளும் அச்சந்தரும் செய்திகளையே வெளியிட்டன. இந்நிலையில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 1968 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு ஒரு செய்தியை விடுத்தார். அதாவது தி. மு. க. ஆட்சிக்கு வந்துள்ளதை எண்ணி இலங்கை அரசு அஞ்ச வேண்டியது இல்லை என்றும் தி. மு. க வினால் இந்தியமத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

தி.மு.க.வை இரண்டாக உடைப்பதுதான் திராவிட இயக்கத்தை தோற்கடிப்பதற்குரிய சிறந்த வழி எனக்கருதிய இந்திராகாந்தி அதற்கேற்ப செயற்பட்டதாகவும் தி மு. க.வை உடைப்பதற்குரிய பலம்பொருந்திய மனிதனாக எம்.ஜி ஆர் இருப்பதை அவதானித்த இந்திரா, எம். ஜி. ஆர். மூலம் தி.மு.க வைஇரண்டாக உடைத்தார் எனவும் தகவல் அறிந்தோர் கூறுகின்றனர்.

இவ்வாறாக உடைக்கப்பட்ட திராவிடஇயக்கம் தம்மிடையேயான போட்டியின் நிமித்தம் தமது முதன்மையான இலட்சியத்தினைக் கைவிடலாயிற்று. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் மிதவாதிகளாய் இருந்தமை ஒரு புறமிருக்க, இந்த உடைவே திராவிட இயக்கத்தை அடிப்படையில் பலவீனப்படுத்தியது. இவ்வுடைவு பிரதானமாக ஈழத்தமிழரின் பக்கபலத்தை குறைக்கும் தன்மையதாய் அமைந்தது.


## மு. திருநாவுக்கரசு

எம். ஜி. ஆர். தலைமையில் உடைந்துருவாகிய அணி (அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்) எம். ஜி. ஆரின் பின்பு ஜெயலலிதாவைத் தலைவராகக் கொண்டு அமையலாயிற்று. திராவிட இயக்கம் எம். ஜி. ஆர் தலைமையில் பரந்த இந்திய தேசிய வாதத்திற் பற்றுடையதாய்க் காட்ட ''அனைத்து இந்திய'' என்ற அடை மொழியைச் சேர்த்து அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை இடலாயிற்று. மேலும் ஜெயலலிதாவின் பின்னணி திராவிட இயக்க இலட்சியத்திற்கு எதிரானது. திராவிட இலட்சியத்திற்கு எதிரான ஜெயலலிதா திராவிட இயக்கத்திற்குத் தலைமை தாங்குவது பாலுக்குப் பூனை காவல் போன்ற கதையே ஆகும். இது ஈழத்தமிழரின் பக்கபலத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாயிற்று இதனால் தமிழகத்தையும், இந்தியாவின் உள்நாட்டு அரசியலையும் ஈழத்தமிழரின் நலனுக்கு முரணானதாய் கையாளக் கூடிய தன்மையை மத்திய அரசு பெரிதும் வளர்த்தெடுத்தது எனலாம்.

எனவே இன்று ஜெயலலிதா அரசு கடைப்பிடிக்கும் ஈழத் தமிழருக்கெதிரான நடவடிக்கைகள் எல்லாம் நீண்ட கால வரலாற்று வளர்ச்சியின் வெளிப்பாடாகவும், திராவிட எதிர்ப்பியக்கத்தின் வளர்ச்சியாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

இப்போது இறுதியாக வரக் கூடிய முடிவு இதுதான். தமிழகத்தில் ஆட்சிக்கு வரக்கூடிய இரு திராவிட இயக்க அணிகளும் தற்போது திராவிட இயக்க இலட்சியத்தைக் கைவிட்டுள்ளன. எனவே இதில் எந்தவொரு அணியும் அறுதிப்பலத்துடன் ஆட்சிக்கு வருமாயின் அது ஈழத்தமிழருக்குச் சாதகமாய் நடக்க வேண்டும் என்ற நிலையிருக்காது. ஆனால் இதில் எந்த அணியாயினும் சரி பலவீனமான நிலையில் ஆட்சிக்கு வருமாயின் அந்த அணியைத் தலையிடிக்கு உள்ளாக்கும், அல்லது வீழ்த்தும் நோக்குடன் எதிரணி ஈழத்தமிழர் பிரச்சினையை முன்னெடுக்க வாய்ப்பிருக்கும். எனவே தமிழகத்தில் பலவீனமான ஒரு மாநில அரசு அமைவதே ஈழத்தமிழரின் பக்கபலத்திற்குச் சாதகமானதாய் அமையக் கூடும்.

# தமிழக அரசு எப்படி ஈழத் தமிழருக்கு எதிரானது?



## தெரிந்து கொள்ளுங்கள்

★ உலகிலேயே மிக அதிக வார்த்தைகளைக் கொண்ட 'தந்தி' நியூயோர்க் நகரத்திலிருந்து சிக்காக்கோ நகரிற்குஅனுப்பப்பட்டது. இது 180,000 வார்த்தைகளைக்கொண்டு சென்றது. பைபிளின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளையே காவிச் சென்றது.

★ உலகச் சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பு தினமானது ஆண்டு தோறும் ஜூன் மாதம் 05 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இத் தினமானது முதன் முதலில் சுவீடன் தலைநகர் ஸ்டாக் ஹோமில் 1972 இல் கொண்டாடப்பட்டது.

★ முதன் முதலில் தட்டச்சு இயந்திரத்தின் உதவியோடு நாவல் எழுதிய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்பவர்.

★ ''விக்டோரியா கிராஸ்'' என்பது இங்கிலாந்து நாட்டில் வீரத்திற்காகக் கொடுக்கப்படும் உயர்ந்த பதக்கத்தின் பெயர் ஆகும்.

★ சவூதி அரேபியாவில் உள்ள 'காவர்' எனப்படும் 'சுரங்கம் தான் உலகின் மிகப் பெரிய எண்ணெய்ச் சுரங்கம். இங்கு 7500 கோடி பீப்பாய் அளவுள்ள பெற்றோல் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

★ உலகின் மிகப் பழமையான தலைநகரம் என்ற பெருமையை சிரியா நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் பெறுகின்றது.

தகவல்
கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை.

# கியூபெக் மாகாணத்திற்கான சுயாட்சித் திட்டம்: கனேடிய ஆங்கிலேயரால் நிராகரிப்பு

றங்கள் மேற்குக்கரை மாநிலங்களின் கோரிக்கையாகும் அத்தோடு, உயர் நீதி மன்றத்திலும் மாற்றம் கொண்டுவரப்படும். ஒன்பது நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் கியூபெக் மாநிலத்தவராக இருக்கவேண்

## யாழ். பல்கலை

கும். பல்கலைக்கழக அனுமதி பெற்று உள் நுழைந்த மாணவர்களுக்குச் சமமான கல்வித் தகைமை உள்ளவர்கள் வெளிவாரி மாணவரிடையேயும் இருக்கிறார்கள். பல்வேறு காரணங்களுக்காக இவர்கள்

# கனேடிய ஆங்கிலேயரால் நிராகரிப்பு

"உலகின் மிக வெற்றிகரமான நாடு'' என்ற அந்தஸ்தைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நாட்டின் 'உயிர் வாழ்வு' இன்று கேள்விக்குரியதாகியுள்ளது. கனடா அரசியலமைபபை பெருமாற்றத்திற்கு உள்ளாக்க வகுக்கப்பட்டிருந்த சார்லெட்டவுண் உடன்படிக்கையை கனடா மக்கள் நிராகரித்ததின் மூலம் இந்நிலை உருவாகியுள்ளது.

கனேடியப்பிரதமர் பிரையின் மல்ரோணியின் பகீரத முயற்சியினால் கடந்த ஆறுமாதமாக நடைபெற்ற பலதரப்பட்ட பகிரங்கப் பேச்சுவார்தைகள் மூலம் உருவாகிய சார்லெட்வுண் உடன்படிக்கையை கனேடிய மச்கள் - ஆங்கில பிரெஞ்சு மொழிபேசுபவர்கள் - நிராகரித்ததன் மூலம் கனடாவின பிரதமர் பிரையின் மல்ரோணியின அரசியல் எதிர்காலம் மட்டுமல்ல, கனடா என்னும் நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குரியதாகியுள்ளது.

1867 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கனேடிய சம்மேளனத்தின்' அரசியலமைப்பு சாசனத்தை மாற்றியமைப்பதன் மூலம் கனடாவில் கிளர்ந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டுவிட பிரதமர் பிரையின் மல்ரோணி முயற்சிகளை மேற்கொண்டார். கனடாவில் உள்ள பிரெஞ்சு மொழி பேசுபவர்களைக் கொண்ட கியூபெக் மாகாணத்தில் சுயாடசி கோரிக்கை இன்று நேற்று ஏறபட்டதல்ல கடந்த சில தசாப்தங்களாகவே இக் கோரிக்கைபடிப்படியாக வளர்ந்து உருப் பெற்றது. இந்நிலையில் 1982 இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் கியூபெக் மாநிலம் கைச்சாத்திட மறுத்தது. உயர்ந்தளவானதான அதிகாரப் பகிர்வு கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய உத்தரவாதம் என்பன அளிக்கப்படாதவரையில் அரசியலமைப்புச் சட்டத்தில் கையொப்பம் இடபபோவதில்லை எனவும் அறிவித்திருந்தது.

இந் நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக பிரதமர் பிரையின் மல்ரோணியால் 1990 இல 'மீக்லேக் உடன்படிக்கை' செய்துகொள்ளப்பட்டது ஆனால் இவ் உடன்பாட்டிற்கு கனடாவில ஆங்கிலம் பேசும் பேற்குக் கரை மாநிலங்களில் பலமான எதிப்புக் கிளம்பியது, இவ் உடன்பாடு மணடோபா மாகாண சபையில் தோல்வி கண்டது. இதை அடுத்து கியூபெக்கில் தனிநாடடுக் கோரிக்கை மேலும் தீவிரமடைந்தது. கடந்த இரண்டு வருடமாக அரசியல் நெருக்கடி நிலையும் அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்து கனடியப் பிரதமர் பரந்த அளவினதான முயற்சிகளை மேற்கொண்டார். கடந்த ஆறுமாத காலமாக பலதரப்பினருடனும் மேற்கொண்ட விரிவான பேச்சு வார்த்தைகள், ஆலோசனைகள் என்பவற்றின் பின்னர் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி சார்லெட்டவுண் உடன்படிக்கை கையெழுத்தாகியது.

இவ் உடனபடிக்கை தொடர்பான பேச்சு வார்த்தைகளிலும்: ஆலோசனைக் கலப்புக்களிலும் முதலில் பங்கேற்க மறுதத கியூபெக் பிரதம அமைச்சர் பின்னர் பங்கேற்றுக் கொண்டார். இறுதியில் இவ்வுடன்பாடு குறித்து திருப்தியும் தெரிவித்துக்கொண்டார்.

இவ் உடன்படிக்கையைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோது பல்வேறு தரப்பினருக்கும் அழைப்புக்கள் விடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்களில் கனடாவில் உள்ள பத்து மாகாண பிரதம அமைச்சர்களும், பிராந்திய அரசாங்கத் தலைவர்களும் பழங்குடித் தலைவர்களும் உட்பட கனேடியப் பிரதமரும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்,

இதேவேளை, கனடா சமஷ்டி அமைப்பிலுள்ள எதிர்க்கட்சியும் கியூபெக் மாநிலத்தில் உள்ள பிரிவினை கோரும் இரு எதிர்க்கட்சிகளும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள எதிர்க்கட்சிகளும் உடன்படிக்கையை எதிர்த்தன. எதிர்ப்பாளர்களில் கியூபெக்கிற்கு சிறப்புரிமை வழங்கப்படக் கூடாது என்பவர்களும வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் போதாது என்ற இருசாராரும் இருந்தனர்.

## சார்லெட்டவுண் உடன்படிக்கை

'சார்லெட்டவுண்' உடன்படிக்கை கடந்த 125 வருடமாக நிலவிவரும் கனேடிய சம்மேளனத்தின் அரசியல் அமைப்பில் பெருமாற்றம் ஏற்படுத்தக் கூடியதாகஇருந்தது இவ்உடன்பாடு, தனியாக கனடாவின் முக்கிய பிரச்சினையான கியூபெக் மாநிலத்தின் பிரச்சினையை மட்டும் அல்லாமல், கனடாவில் உள்ள 7.50 000 சுதேசிகளின் பிரச்சினை, கனேடிய மக்களின் குணாதிசயங்கள், பண்புகள் என்பன தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முற்பட்டது இதன் அடிப்படையில் பலவேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 'கியூபெக்' தொடர்பான முக்கிய தீர்வுகள்

இவ் உடன்படிக்கையின்படி கியூபெக் மக்கள் அதாவது பிரெஞ்சு மொழி பேசும் கனேடியர்கள் தனித்துவமான ஒரு சமூகத்திற்கான, முழு அந்தஸ்தையும் பெற்றனர். இது அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் வரையறுக்கப்படும் என்பதோடு, அதனைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதமும் அளிக்கப்பட்டது. அதாவது அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் கியூபெக் மாகாணத்திற்கென வேறுபட்ட சட்டக் கோவைக்கும், பிரெஞ்சு மொழிக் கலாசாரத்திற்கும் உத்தரவாதம் கொடுக்கப்படடது.

இவற்றை உறுதிப்படுத்துமாப்போல் கனடிய மக்கள் பிரதிநிதிகள் சபையில் (ஹவுஸ் ஒப் கொமன்ஸ்) கியூபெக் மாகாணத்திற்கென 23 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. அதேவேளை, இதுவரை செனட்சபையில் இருந்து வந்த நியமன முறையும் நீககப்பட்டு தெரிவு செய்யப்படும் முறையும் அங்கீகரிக்கப்பட்டது இதில் மாகாணத்திற்கு 6 செனட்டர்கள் வீதமும், பிராந்தியங்களுக்கு ஒரு செனடடரும் என்ற ரீதியில் தெரிவு செய்யப்படுவார்கள். செனட் சபையில் செய்யப்பட்ட இம் மாற்படும். ஒன்பது நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் கியூபெக் மாநிலத்தவராக இருக்கவேண்டும் எனவும் ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன் மூலம் கனடாவில் வீழ்ச்சி அடைந்து வரும் பிரெஞ்சு குடித்தொகை வளர்ச்சி வீதத்தால் பிரெஞ்சுக்காரரின் தேசிய முக்கியத்துவம் குறைந்துவிடும், என்ற பிரெஞ்சுக்காரரின் அச்சத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது

இவை யாவற்றிற்கும் மேலாக சமஷ்டி அரசியல்அமைப்பில் மாற்றம் எதுவும் ஏறபடுத்துவதையோ, அன்றி கியூபெக் இனவிகிதாசாரத்தை மாற்றக்கூடிய விடயம் ஏதுவாகிலும் அதற்கு எதிராக 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையை கியூபெக் மாகாணம் பெற்றது

மேலும, சமஷ்டி அரசிடம் இருந்து 20 விடயங்கள் அதிகாரப்பரவலாக்கல் மூலம் மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் நிலக்கரி, காடுவளர்ப்பு, உல்லாசப் பயணத்துறை, நகர விவகாரங்கள், வீடமைப்பு, உட்பட மேலும் பல துறைகளும் அடங்கும். இவ்வாறு அதிகார பகிர்வின் மூலம் கிடைக்கும் துறைகள் மாகாணங்ளுக்கு பல கோடிக்கணக்கான டொலர் வருமானத்தை வழங்கக் கூடியவையாகஇருந்தன,

## பழங்குடியினருக்கான அரசாங்கம்

இவ் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பின் உலகில் முதலாவது அரசாங்கத்தைப் பெறும் சுதேசிகளாக கனேடிய எஸ்கி மோக்களே இருப்பார்கள், இதன் மூலம் சுதேசிகள் சுயாட்சிக்கான அரசியல் உரிமையும் நிலவுடமை கொள்வதற்கான உரிமையும் பெற்றுக்கொள்வார்கள். இதன் மூலம் கனேடிய தேசிய அரசியலில் பங்கேற்கும் உரிமையும் சுதேசிகளுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

## குணாதிசயங்கள், பண்புகள் தொடர்பான உரிமைகள்

இவ் உடன்படிக்கைகளின்படி கனடாவில் வாழும் மக்களின் தனித்துவமானதும், குழு ரீதியானதுமான குணாம்சங்களுக்கும் பண்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அவற்றிற்குரிய உரிமைகளும் முழு அளவில் அளிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. இதன் பிரகாரம் கனடாவிலுள்ள இனங்களுக்கு இனரீதியான சமத்துவமும், ஆண்-பெண் சமத்துவமும் என்பனவற்றோடு, சகலரினதும் அடிப்படை மனித உரிமைகளும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறாகப் பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையே கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற கருத்துக் கணிப்பில் கனேடிய மக்களால் நிராகரிக்கப்பட்டது. கனடாவிலுள்ள பத்து மாநிலங்களின் கியூபெக் உட்பட ஆறுமாகாணங்கள் உடன்பாட்டை நிராகரித்து வாக்களித்தன. நிராகரித்த கியூபெக் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் யாவும் கனடாவின் மேற்குக் கரையோர மாகாணங்களாகும். ஆதரவளித்த மாநிலங்கள் கியூபெக்கைச் சூழவுள்ளதும், கனடா மாநிலங்களில் சிறியவையும் அத்திலாந்திக் கரையை அண்டியுள்ள கிழக்கு மாகாணங்களாகும்,

[6ஆம் பக்கம் பார்க்க]

காரணங்களுக்காக இவர்கள் பல்கலைக்கழகம் போகாமல் இருந்திருக்கலாம் என்றார்,

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

பல்கலைக்கழகம் ஒரு கற்பக தரு.அதன் பலனை முழுச்சமூகமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் பல்கலைக்கழகக் கல்வி பரவலாக்கப் படுவதைத் தடுத்தல் நியாயவிரோதமானசெய்கை. மேல்நாடுகளில் பல்கலைக்கழகங்கள் இராப் பகலாய் இயங்குகின்றன. மற்ற நாடுகளிலெல்லாம் பல்கலைக்கழகம் மக்களைத் தேடிச் செல்கிறது. இங்கு பல்கலைக் கழகத்தை ஒரு 'கட்டுப்பெட்டி' நிறுவனமாக்கப் பார்க்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பல்கலைக் கழகத்தில் நாம் இனாமாக நன்மைகள் பெறவில்லை. பல்கலைக்கழக அனுமதிக்கென்று 450 ரூபா நாம் செலுத்தியுள்ளோம். நடந்து முடிந்த பரீட்சைக்கு 250ரூபா கட்டணம். பாடத்திட்டம், அறிவுறுத்தல்கள் எல்லாம் ஆரம்பத்தில் பணம் கொடுத்துத்தான் கொள்வனவு செய்தோம். உள்வாரி மாணவர்கள் ஆத்திரப்படுவது போல் நாங்கள் அவர்கள் பெறும் நன்மைகளைச் சுரண்டவில்லை என்றும்,

இந்தப் போர்க்கால நிர்ப்பந்த சூழ்நிலையில் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தை நாட முடியாதநிலையில் நாம் உள்ளோம். இந்த நிலையில் பல்கலைக்கழகத்தை விட்டு எம்மை வெளியேறச் சொல்லிக் கூட்டங்கள் போடுவதும், சுலோகங்கள் எழுப்புவதும் நீண்ட காலத்தில் எமக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம் எமக்கு

( 6ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

# ரஷ்சிய பாராளுமன்றம் 'ஸ்ராட்' ஒப்பந்தத்தை அங்கீகரித்தது

(வாஷிங்டன்)

அமெரிக்காவுடன் இணைந்து ரஷ்யாவினால் மேற்கொள்ளப்பட்ட ''ஸ்ராட்'' எனும் இராணுவ முக்கியத்தும் வாய்ந்த ஆயுதங்கள் குறைப்பு ஒப்பந்தத்தை ரஷ்ய பாராளுமன்றம் நேற்று முன் தினம் ஏற்றுக் கொண்டது.

நெடுந்தூர ஏவுகணைகளைக் கொண்ட அமெரிக்கா மற்றும் முன்னாளைய சோவியத்தின் படைக்கல தொழிற்சாலைகளை ஏழு ஆண்டு காலத்துக்குள் மூன்றிலொரு பங்காக குறைத்திடுவதற்கு இவ் ஒப்பந்தம் வழிவகுக்கின்றது.

சோவியத் உயர்சபையின் கூட்டம் ஒன்றில் பேசிய உறுப்பினர்கள் சிலர் இவ் ஒப்பந்தம் ரஷ்யாவுக்கு நியாயத்தன்மை வாய்ந்ததாக அமையவில்லை என்று கூறி எதிர்த்தனர்.

இந்த ஒப்பந்தம் நடைமுறைச் சாத்தியமாக அமைய வேண்டுமானால் முன்னாளைய சோவியத் நாடுகளான உக்ரேன், பலாரஸ், கஜகிஸ்தான் ஆகிய நாடுகள் இதனை ஊர்ஜிதம் செய்தாக வேண்டும்.

# வெளிநாட்டு கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை

- பில் கிளிங்டன்

(வாஷிங்டன்)

தாம் அதிகாரத்திற்கு வருவது அமெரிக்காவின் வெளிநாட்டு பொருளாதாரக்கொள்கையின் பலவீனத்தையோ அல்லது ஸ்திரமின்மையையோ ஏற்படுத்தமாட்டாது என அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பில் கிளிங்டன் உலக நாடுகளுக்கும் நிதிநிறுவனங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் எந்தவித மாற்றமும் இருக்கமாட்டாது எனத் தெரிவித்ததுடன், தாம் செய்யப்போகின்ற மாற்றமும் கூட சந்தை முறைகளை பலப்படுத்துமேயன்றி நலிவடையச் செய்யமாட்டாது உலகின் மாற்றங்களுக்கு ஒப்ப புதிய பொருளாதார வளர்ச்சியை பின்பற்றினாலும்கூட உறுதிப்பாட்டை பேணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மற்றும் அமெரிக்க ஆதரவிலான மத்திய கிழக்கு நாடுகளில் சமாதான பேச்சுவார்த்தையிலும், ரஷ்சியாவின் ஆயுத ஒழிப்பு உடன்படிக்கை பூர்த்திசெய்தல் யுகோஸ்லாவியாவில் சமாதானத்தை ஏற்படுத்தல், சோமாலியாவில் ஏற்பட்ட வறுமைக்கு உதவுதல் போன்றவற்றிற்கான வெளிநாட்டுக் கொள்கையில் விசேட கவனம் செலுத்தப்படும் எனத்தெரிவித்துள்ளார்.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## வளர்ந்தோர் கல்விப்பிரிவு

பாடநெறிகள்:

1. புத்தகம் கட்டுதல்.
2. நீரிறைக்கும் இயந்திரம் திருத்தல்.
3. தட்டச்சு இயந்திரம் திருத்தல்.
4. விவசாயத்தில் ஒட்டுமுறைகள்

முடிவுத் திகதி: 10 - 11 - 1992
நெறிகள் ஆரம்பம்: 13 - 11 - 1992

(சி-5358) அதிபர்.



## St. patrick's College Jaffna
## பிரவேசப் பரீட்சை - 1993
07 - 11 - 92

| ஆண்டு | சமுகம்தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சைஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8.00 | 8.30 |
| 6 | 8.00 | 8 30 |
| 4 | 8.00 | 8 30 |
| 1 (இல. 01—100) | 8.00 | 8 30 |
| 1 (இல. 101—206) | 10,00 | 10,30 |

[3589]

கல்லூரி அதிபர்


நெஞ்சை விட்டகலா

## நினைவலைகளின் 2-ம் ஆண்டு

## பொன் விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இளைஞர் சங்கம், மனோன்மணி சனசமூக நிலையம் ஆகியவற்றின் பொன் விழா நிகழ்வுகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன

இன்று காலை மரதன் ஓட்டப்போட்டி, பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் இடம்பெறும் அத்துடன் மனையியல் பொருள்காட்சியும் ஆரம்பமாகும் மாலை கரபந்தாட்ட இறுதிப் போட்டிகள் இடம்பெறும்

நாளை பொது அறிவுப் போட்டி, மலர் வெளியீட்டு விழா என்பன இடம்பெறும் இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் நல்லூர் பிரதேச பொறுப்பாளர் திரு. சுதா தேசிய கொடி ஏற்றிவைப்பார் பிரதம விருந்தினராக நல்லூர் விசேட ஆணையாளர் திரு. ஆ மகாலிங்கம் கலந்துகொள்வார்

## கல்விக் கருத்தரங்கு

தமிழீழ மாணவருக்கான கல்விக் கருத்தரங்குத் தொடரில் இன்று 'சிந்து வெளி நாகரிகம்' என்ற தலைப்பில் மாலை 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதில் விரிவுரையாளர் திரு.கிருஸ்ணராஜா கருத்துரை வழங்குவார். இக் கருத்தரங்கில் தமிழீழ மாணவர்களை கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கடல்

லும், கூடுதல் அழுத்தம், பலப்பிரயோகத்தின் மத்தியிலுமே பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வயிற்றோட்ட

டத்தினால் அல்வாய்வடக்கை சேர்ந்த மணிவண்ணன்சுபாஸ்கரன் (வயது1) என்ற குழந்தை மரணம் அடைந்துள்ளது

கிழக்கு

ஏனைய பல்கலைக் கழக மட்டத்திற்கு கொண்டு செல்ல உள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஊழல் நடவடிக்கை மூலம் ஜெயலலிதா 150 கோடி கொள்ளை

- சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

எம். ஜி ஆர். மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு ஜெயலலிதா துரோகம் செய்துவிட்டார். அவர் எல்லையில்லாத ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். ரூபா 150 கோடிவரை இந்தக்கொள்ளை ராணி கொள்ளையடித்து வெளிநாட்டு வங்கிகளில் போட்டுள்ளார்.

இவ்வாறு நல்லாட்சி இயக்கத்தின் முதல்கூட்டம் மதுரையில் நடைபெற்ற போது தலைமை வகித்துப் பேசிய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம்சுவாமி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஊழலில் இருந்து தமிழ் நாட்டைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த இயக்கத்தை காந்தி பிறந்த தினம் அன்றுஉருவாக்கினோம் தமிழ் நாட்டைக் காக்கவே நாம் இங்கு வந்ததாக சுவாமி கூட்டத்தில் தெரிவித்தார்.

## குடமுழுக்கும் மணவாள கோலமும்

வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் கோவில் புதிய எழுந்தருளி ஐயன் குடமுழுக்கும் மணவாளக் கோலமும் நடைபெறவுள்ளன

இன்று காலை 7.00 மணிக்கு குடமுழுக்கும் நாளை காலை 7.45 மணிக்கு சங்காபிசேகமும் நடைபெறும்

அத்துடன் சிவபூசகர் திரு செல்லப்பா அப்புத்துரை அவர்களுக்கு பாராட்டு வைபவமும் நடைபெறும்

## இரத்தம் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள இரத்த வங்கியில் இரத்தம்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி வைத்தியப் பொறுப்பதிகாரி திருமதி இராஜஇராஜேஸ்வரன் தெரிவித்துளளார்

இரத்தம் வழங்க விரும்புவோர் உடன் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார் (42)


## மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை நாகமணி

(முன்னாள் யாழ். இ போ. ச. சாரதி)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்-முடமாவடியை வதிவிடமாகக் கொண்டவருமான நாகமணி காலமாகி விட்டார்.

இவர் வேலுப்பிள்ளை சின்னக்குட்டி ஆகியோரின் அன்பு மகனும், இரத்தினவடிவின் அன்புக் கணவரும், சிவஞானம் (கொழும்பு), செல்வஞானம் (கனடா), நவஞானம் (ஜேர்மனி), இரவீந்திரன் (ஜேர்மனி), ராஜேஸ்வரன் (அமால் ஹாட்வெயர்ஸ் கொழும்பு), ஜெகதீஸ்வரன் (வெள்ளை), சுகிர்தா (மங்கயர்க்கரசி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணிதேவி, ரோகினி, ஞானகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீபன், அனோஜன், சோபிகா, நிரோஷிகா, றொசான், செறான் ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற செல்லையா (திருமலை), காலஞ்சென்ற மாரிமுத்து, வள்ளியாச்சி, காலஞ்சென்ற அப்புக்குட்டி, கந்தையா (திருமலை) மாணிக்கம், மார்க்கண்டு யாழ். மின்சாரசபை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பிராசா, காலஞ் சென்ற ஆறுமுகம் சண்முகவடிவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (07 - 11 - 92) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக செம்மணி மயானததிற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:

449, இராமலிங்கம் வீதி, (சங்கீதா வீதி) நல்லூர், யாழ்ப்பாணம்.

ஜெகதீஸ்வரன் (வெள்ளை) (மகன்)

[3594]



யாழ். ஆயராகப் பதவியேற்ற மேதகுதோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகைக்கு ''நல்வாழ்த்துக்கள்''

## மிற்சுபிஷியில் MITSUBISHI சலுகைகள்

மிற்சுபிஷி படச்சுருள்களை கொழும்பு பிரதியாக்கலிற்கு எம்மிடம் தருவதன் மூலம் இரண்டு வகையான விசேட ''தள்ளுபடிவிலை'' சலுகைகளை பெற்றுக் கொள்ளுங்கள்

விபரங்கள் நேரில்

கலக்சி


கியூபெக் மாகாண....

## கனேடிய ஆங்கிலேயரால் உடன்படிக்கை தோற்கடிப்பு

அதாவது இவ் ''சார்லெட்டவுன் உடன்படிக்கை'' இரு சக்திகள் நிராகரித்தன. ஒன்று கியூபெக்கிற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்படக் கூடாது என்ற ரீதியில் செயற்பட்ட ஆங்கிலேயர் ஆதிக்கத்திலுள்ள மாகாணங்கள். இதற்கு முன்

## இன்று வரவு செலவு திட்டம்

தற்போதைய அரசாங்கத்தின் ஐந்தாவது வரவுசெலவுத் திட்டம் இன்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது 1993 நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும்

தீஸ்து வழங்கப்படக் கூடாது என்ற ரீதியில் செயற்பட்ட ஆங்கிலேயர் ஆதிக்கத்திலுள்ள மாகாணங்கள். இதற்கு முன்னர் 1990 இல் 'மிக்லேக்' உடன் படிக்கையையும் இம் மாகாணங்களே நிராகரித்தன. இதேவேளை கியூபெக்கில் சார் லெட்டவுண் உடன்படிக்கைக்கு எதிராக 56 6 சதவீத வாக்குகளும் எதிராக 43.3 சதவீத வாக்குகள் ஆதரவாகவும் அளிக்கப்பட்டிருந்தது. நிராகரித்தவர்களுள் கியூபெக்கிலுள்ள ஆங்கிலேயர் உட்பட பிறமொழி பேசும் 17 வீதமானோரும் தனி நாட்டுக்கோரிக்கையை ஆதரிக்கும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களும் அடங்குவர். இந்நிலையில் கியூபெககில் எதிர்த்து வாக்களித்த ஆங்கிலேயரை தவிர்த்து நோக்கின் பிரெஞ்சுக்காரர்கள் உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும். இந் நிலையில் சார் லெட்டவுண் உடன்படிக்கை ஆங்கிலேயரால், அதாவது கனேடிய பெரும்பான்மை வெள்ளையர்களால் தோற்கடிக்கப்பட்டது என்றே கூறலாம்.

இந் நிலையானது உலகில் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைக்கு தனியரசு ஒன்று நிறுவுவதைத் தவிர தீர்வு ஒன்றை எட்டிவிட முடியாது என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. கடந்த காலத்தில் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைகளை சோவியத்யூனியனும், கம்யூனிச சித்தாந்தத்தைக்கடைப்பிடிக்கும் நாடுகளும் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது ஆனால், பின்னர் சோவியத்தின் வீழ்ச்சிக்கு தேசிய இனங்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளும் காரணமாக இருந்தமை வெளிப்பட்டது. இதே போன்று மேற்குலகிலும் சுவிஸ்லாந்து, கனடா என்பன தேசிய இனங்களின் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்துக் கொண்ட நாடுகள் என பெருமையாகக் கூறப்பட்டன மூன்றாம் உலக நாடுகளில் முன்னுதாரணமும் காட்டப்பட்டன. ஆனால் பெரும்பான்மை இனங்கள் எங்கும் சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்குவதிலேயே தீவிரமாக உள்ளன என்பதே இன்று நிதர்சனமாகவுள்ளது. இதனை கனடாவில் ஆங்கிலம் பேசும் மேற்கு மாகாணங்கள் சார்லெட்டவுண் உடன்பாட்டை நிராகரித்ததில் இருந்தே விளங்கிக்கொள்ளமுடியும்

ஜெயராஜ்

ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 6600 கோடி ரூபா வாகும்

### கல்விச்சேவைகள்

இவை குறித்து முழு விபரங்களையும் தகவல் பிரிவில் பெற்றுக் கொள்வதற்காகவே தகவல் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என்றார் கல்விச் சேவைகள் சபையின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ்.

### புதிய

அண்மையில் மருத்துவ பீடத்தில் நடந்த ராக்கிங் தொடர்பாக ஏற்பட்ட விளைவுகளை அடுத்து மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் தனது பீடாதிபதி பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து சமர்பித்த கடிதம் தொடர்பாகவே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

### யாழ்

நூல் நிலைய வசதிகளைத்தரவில்லை. நிர்வாகம் எமக்கு அடையாள அட்டைகளைத் தருமோ, தராதோ எமக்குத் தெரியாது. அது அவர்களுக்குத்தான் வெளிச்சம். மாணவர் பொது அறைப்புக்கம்நாம் தலை வைத்துப் படுத்தது கிடையாது அப்படியிருக்க எமக்கெதிராக ஏன் இந்தக் கோஷங்கள்? என்றுமுடித்துக் கொண்டார்.

### மேஜர்

பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. இ. சு நடராஜா, யாழ் மாவட்டத் தளபதி திரு வ. செல்வராஜா, மகளிர் படையணி துணைத் தளபதி செல்வி ஜெனி அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து விழா சிறப்புமலர் வெளியீடும், கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெறுகின்றன.


## தேவை

### நிர்வாக அலுவலர்

கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு நிர்வாக அலுவலர் ஒருவர்தேவை.

தகைமை:1. நிர்வாகத்துறையில் 10 வருட முன் அனுபவம்
2. தமிழ் ஆங்கிலம் மொழிகளில் திறமை தேர்ச்சி

வயதெல்லை: 35 - 40 வருடங்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி : 20 , 11 - 1992

விண்ணப்பதாரிகள் தாம் விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு,

தலைவர்,
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
விவசாய சேவை நிலையக் கட்டடம்,
கிளிநொச்சி.

என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

03 - 11 - 1992 (3580)


அன்னை மடியில்
10 — 04 — 1972

ஆண்டவன் மடியில்
14 — 11 — 1990



அமரர்

## அம்பரகேது ஜெயக்குமார்

[வேலணை மேற்கு - 8]

குமரா எங்கள் ஜெயக்குமரா!
பாசத்தின் ஒளி விளக்கே - எங்கள்
பண்பின் திருவுருவே!
தந்தையோ உன்னிடத்தில்!
தாயோ மனம் வெதும்புகின்றாள்
உன் உடன்பிறப்போ-ஓயாது கதறுகிறார்கள்
உன் அத்தானோ மனம் கலங்குகின்றார்
நீ சென்று இத்துடன் இரண்டாண்டு முடிந்ததையா
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

விநாயகர் வீதி,
கல்லையங்காடு.
(3590)

உங்கள் பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள், மருமகன்,
அத்தான் T. வரதராஜா


## கலக்சி

### புகைப்பட சேவை

337, முதலாவது மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5364)



## தையல் பயிற்சிநெறி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சாவகச்சேரி, (தனங்களப்பு வீதி) யாழ்ப்பாணம் (சிவன்கோவிலடி, காங்கேசன்துறை வீதி) ஆகிய இடங்களில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையங்களில் புதிய தையல் பயிற்சிநெறி 16-11-92இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் 10-11-92-க்கு முன்னர் தங்களுடைய விண்ணப்பங்களை நேரில் அந்தந்த தையல் பயிற்சி நிலையங்களில் வழங்கலாம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

[3587]


## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 05. 11. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6487

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்-:

24-5793, 41-7103, 27-5307, 28-6623, 41-9830, 26-2414
26-5882, 24-5015, 24-6489, 26-3250, 24-6161, 24-5454
25-7664, 22-6676, 25-6699, 25-3794, 36-3631, 22-8176,
25-813

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

28-6853, 22-7356, 26-1732, 24-6485, 26-6853, 22-7956
26-1792, 24-6485, 26-6309, 27-5977, 24-5529, 26-649
26-3530, 24-5721, 27-9492, 24-9596, 27-9756, 26-9797
26-9611, 27-2016, 26-676


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.